Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல்,மூக்குக் கண்ணாடியகம்



பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 29 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 01 (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:45

# சந்திரிகாவின் நிலைப்பாடு தொடர்பாக பாலாவுக்கு சொல்ஹெய்ம் விளக்கம்!

## விமான நிலையத்தில் நேற்று சந்திப்பு!

(கொழும்பு)

**லண்டன் செல்லும் முன்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பேச்சுக்களை நடத்தினார்.**

**கடந்த வியாழனன்று கிளிநொச்சியில் நடந்த பேச்சுக்களின்போது சமாதான முயற்சிகளை முன்னகர்த்துவதற்காக புலிகள் தரப்பு அரசாங்கத்திற்கு யோசனை ஒன்றை அனுப்பியிருந்தது.**

**இந்த யோசனைகளுக்கு ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் கிடைக்காத நிலையில் ஜான் பீற்றர்சன் கெய்ரோவுக்குச் சென்றுவிட்டார்.** (12 ஆம் பக்கம் பார்க்க)

## போதைப்பொருள் வியாபாரி மன்னாரில் சுட்டுக்கொலை!

(மன்னார்)

மன்னார் நகரத்தில் போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய இளைஞரொருவர் நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ரி.ஜெபநேசன் என அடையாளம் காணப்பட்டுள்ள இவரது கொலைக்கு எல்லாளன் படை உரிமை கோரியுள்ளது.

மன்னார் பிரதேச் செயலகத்துககு அருகில் நேற்றுக்காலை பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்ட இந்தச் சடலத்தின் அருகில் காணப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்கள் வெளிநாட்டுக்கு ஓட்டம்!

### இணையத்தளம் தகவல்

(கொழும்பு)

ஈ.பி.டி.பி. கட்சியின் முக்கிய உறுப்பினர்களான நிஸாந்தன், தினமுரசு பாஸ்கரன், ஜெகன் ஆகிய மூவரும் வெளிநாட்டுக்குத் தப்பி ஓடிவிட்டதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இந்த இணையத்தளத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது -

ஜெகன், நிஸாந்தன் ஆகியோர் பெரும் தொகைப் பணத்தை எடுத்துக்கொண்டு ஓடியுள்ளதாகத் தெரியவருகிறது.

ஈ.பி.டி.பி.யின் திருகோணமலை பிரமுகர் புஸ்பராஜா, மரமுந்திரிகை கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை உறுப்பினர் பதவியிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் இந்தியாவிலிருந்து தொலைபேசி மூலம் பதவி விலக்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்து ஈ.பி.டி.பி.யில் நீடித்துவந்த உள்முரண்பாடுகள் தற்போது பெருமளவிற்கு வெடித்துள்ளது. இதன் காரணமாகவே டக்ளஸ் தேவானந்தா இந்தியா மூலம் கருணாவுடன் இணைய விரும்புவதாக மறைமுக அறிக்கை வெளியிட்டார்.

ஈ.பி.டி.பி.யின் உள்முரண்பாடுகள் வெடிதது சிலர் தப்பித்திருப்பதன் மூலம் அந்தக் கட்சியின் உறுப்பினர்களாக இருந்த சின்னபாலா, சிங்கம் ஆகியோர் கொலை தொடர்பான விவரங்கள் வெளிவரக் கூடும் எனவும் இந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# அன்ரன் பாலசிங்கம் லண்டன் திரும்பினார்!



(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன்பாலசிங்கம் நேற்றுக்காலை லண்டனுக்குப்புறப்பட்டுச்சென்றார்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம் மற்றும் சாந்தன் ஆகியோர் விமானப்படையின் ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சி பொது விளையாட்டரங்கிலிருந்து நேற்றுக்காலை 10 மணியளவில் புறப்பட்டுச்சென்றனர்

இவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் லண்டனுக்கு புறப்பட்டனர்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தமிழீழதேசியத்தலைவர் பிரபாகரனை சந்திக்க வன்னி வருவதையொட்டி கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கடந்த 9 ஆம் திகதி கிளிநொச்சிக்கு வந்திருந்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைபெற அவாவுறும் மக்களுக்கு அரபாத்தின் மறைவு பேரிழப்பாகும்!

### தலைவர் பிரபாகரன் அனுதாபம்



(கிளிநொச்சி)



வரலாற்றில் சிக்கலான தருணத்தில் நிகழ்ந்துள்ள யாசீர் அரபாத்தின் மறைவு, ஒடுக்கப்பட்டு நீதி மறுக்கப்பட்டு - சுதந்திரமும் விடுதலையும் பெற அவாவுறும் மக்களுக்கு ஈடு செய்யமுடியாத இழப்பாக அமைவதாக பலஸ்தீன மக்களுக்கும் அவர்களின் தலைமைத்துவத்துக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அனுப்பிவைத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த அனுதாபச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது -

தமிழீழ மக்கள் சார்பாக பலஸ்தீன மக்களின் உயர் மரியாதைக்குரிய தேசியத் தலைவர் ஜனாதிபதி யாசீர் அரபாத் அவர்களின் மறைவுக்கு எனது இதயபூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பலஸ்தீன மக்களின் தேசிய ஒற்றுமையின் குறியீடாக யாசீர் அரபாத் விளங்கினார். அவர் விடுதலைக்கான தமது மக்களின் போராட்டத்தின் சரித்திர நாயகனாவார்.

அவர் பலஸ்தீன மக்களால் மட்டுமல்ல, உலகத்திலுள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களாலும் முன்னுதாரணமாக வலிமைமிக்க ஒருவராக ஆத்மபூர்வமாக உணரப்பட்டவர்.

வரலாற்றில் சிக்கலான தருணத்தில் நிகழ்ந்துள்ள அவரது மறைவு ஒடுக்கப்பட்டு, நீதி மறுக்கப்பட்டு, அதிலிருந்து சுதந்திரமும், விடுதலையும்பெற அவாவுறும் மக்களுக்கு ஈடு செய்யமுடியாத இழப்பாக அமைகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## என்னைக் கொல்லும் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் மாற்றவில்லை!

### 'இந்து' பத்திரிகை பேட்டியில் சந்திரிகா

(கொழும்பு)



அரசாங்கத்துடன் போர்நிறுத்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் செய்திருந்தாலும் அவர்கள் தற்போதும் தன்னைக் கொல்வதற்கான முயற்சிகளிலேயே ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

விடுதலைப்புலிகள் இராணுவத்தீர்விலேயே நாட்டம் கொண்டுள்ளனர். முதன் முதலாக விடுதலைப் புலிகள் அமைப்பு மூன்று பிரிவுகளாகப் பிரிந்துள்ளது. பிரபாகரன் தனது இராணுவத் தளபதியை இழந்துவிட்டார். தற்போது அவரது கடற்படைத் தளபதியுடனும் ஆழ்ந்த கருத்து வேறுபாட்டில் உள்ளார். எனவே அவர்களது இராணுவக் கட்டமைப்பு உறுதியானதாக உள்ளதென யாராவது தெரிவிப்பார்களென நான் நினைக்கவில்லை.


விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளபதி மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளார். எனவே உடனடியாக அவரை வெளியில் கொண்டு செல்ல வேண்டுமென எங்களுக்குத் தெரியப்படுத்தினார். பின்னர் மீளத் திரும்பி வந்தார்.


அவர் சிங்கப்பூரில் சென்று ஒரு வைத்தியரைச் சந்திக்கவோ (12ஆம் பக்கம் பார்க்க)

## நமது ஈழநாடு கிளிநொச்சியில் நடத்தும் க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான கருத்தரங்கிலிருந்து சில காட்சிகள்!









## தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டத்துக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்களுக்கான முக்கிய சந்திப்பு இன்று மாலை 5.30 மணிக்கு (பழைய நேரம்) கன்னாதிட்டி சயன்ஸ் கோலில் நடைபெறவிருப்பதால், அனைவரையும் தவறாது உரிய நேரத்துக்குச் சமூகமளிக்குமாறு யாழ்.மாவட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## உதவிப்பிரதேச செயலர் இடமாற்றம்

(மட்டுவில்)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கொடிகாமம் உப அலுவலகத்தில் உதவிப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய திருமதி தேவந்தினி பாபு சங்கானை பிரதேச செயலகத்துக்கு இந்த மாதம் நாளைமுதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை - தென்மராட்சி பிர தேச செயலகத்தின் கொடிகாமம் உபஅலுவலகத்துக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு சங்கானை பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலராகக் கடமையற்றிய எம்.பரந்தாமன் நியமிக்கப்பட்டுள்ளார். (24)

## 117 ஆவது வயதில் உயிரிழப்பு

(பருத்தித்துறை)

மூன்று நூற்றாண்டு காலம் வாழ்ந்த வயோதிபர் ஒருவர் கடந்த புதனன்று திடீர் சுகவீனமுற்று உயிரிழந்துள்ளார்.

செம்பியன்பற்றைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை என்ற 117 வயதுடையவரே உயிரிழந்தவராவார்.

1882 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி பிறந்த இவர் சிறந்த தேகாரோக்கியத்துடன் வாழ்ந்து வந்தவர். மூன்று தினங்களுக்கு முன்னர் திடீரென்று சுகவீனமுற்று உயிரிழந்தார். (44)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சமூக மட்டத்தில் இளைஞர் - யுவதிகளை ஒன்றிணைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் - வலி.தென்மேற்கு பிரதேசசபையும், கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இதன்முதற்கட்டமாக - மானிப்பாய் பிரதேசசபைக்குட்பட்ட இளைஞர் - யுவதிகளுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று நடைபெறவுள்ளது. (91)

## சமாதானப் பாசறை நிகழ்வு

(சுதுமலை)

திருமறைக் கலாமன்றம் - இளைஞர்களுக்கான சமாதானப் பாசறை நிகழ்வொன்றினை, இன்று காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை மறைக்கல்வி நடு நிலையத்தில் நடத்தவுள்ளது.

இளைஞர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறந்த தலைமைத்துவத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த முழுநாள் சமாதானப் பயிற்சியை திருமறைக் கலாமன்றத்தினர் ஒழுங்கு செய்துள்ளனர். (91)

## இசை நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட இசைத்துறையினர் நடத்தும் இசை நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக இசைத துறை விரிவுரையாளர் ஏ.கே. கருணாகரன் இசைவிருந்து வழங்கவுள்ளார்.

## வாராந்த ஆன்மீக சொற்பொழிவு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில் - பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம் பெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'அவதார மகிமை' என்னும் தலைப்பில் பருத்தித்துறை கலைஞர் வட்டச் செயலாளர் பஞ்சலிங்கம் சொற்பொழிவாற்றவுள்ளார். (20)

## எஸ்.எல்.ஏ.எஸ் பரீட்சைக்கு தோற்றுவோருக்கு விசேட வகுப்பு

இலங்கை நிர்வாக சேவை பரீட்சைக்குத் தோற்றுவோர்களுக்கான விசேட வகுப்பு சனிக்கிழமைகளில் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 6 மணிவரையும், ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 1 மணி வரையும் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைவரும் கலந்துகொள்ள முடியுமென்று அரச சேவையின் கீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் கு.பற்குணராசா தெரிவித்தார்.

## வெளிச்சம் இன்று வெளிவருகிறது

விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தின் கலை, இலக்கிய சமூக இதழான வெளிச்சத்தின் 88 ஆவது இதழ் இன்று வெளிவருகிறது.

இந்த இதழில் தமிழீழ தேசியத் தலைவரின் 50ஆவது பிறந்ததினத்தையொட்டிய கவிதையுடன், மாலிகா, கல்வயல் வே.குமாரசாமி, புதுவை இரத்தினதுரை, யாழ்பாடியார், க.சந்திரா, வேல்.லவன் ஆகியோரின் கவிதையுடன் வின்சன் புளோரன்சின் மொழிபெயர்ப்புக் கவிதையும், சிதம்பர திருச்செந்திநாதன், தாட்சாயணி, கலாநிதி சோமஸ்கந்தன், க.சட்டநாதன் ஆகியோரின் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் யதீந்திராவின் கட்டுரையுடன் ஞானரதனின் தொடர் கட்டுரையும் மயிலங்கூடலூர். பி. நடராசனின் நேர்காணல், பதிவுகள், குறிப்புகளுடன் இன்னும் பலவும் இந்த இதழில் இடம்பெற்றிருக்கின்றன.

## கலைவிழா

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்கசபை முன்பள்ளிப் பாடசாலையின் வருடாந்தக் கலைவிழாவும், சான்றிதழ் வழங்கும் விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் சனசமூக நிலையத் தலைவர் தி. செல்வராஜா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்தவிழாவுக்கு பிரதமவிருந்தினராக பருத்தித்துறைக் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்துகொள்வார். (12)


சலங்கை ஒலிக்க வாழ்த்துகின்றோம்



திரு திருமதி பிரான்சிஸ்
தம்பதிகளின் செல்வப் புதல்வியும்
சலங்கை நர்த்தனாய அதிபர் நாட்டிய
கலா நர்த்தகி நாட்டிய விஷாரத்
ஸ்ரீமதி ஜெயந்தி யோகராஜா
அவர்களின் மாணவியுமான
தமிழர் பண்பாடும்
பரதக் கலைக்கு
புது மெருகூட்டும்
செல்வி சிந்தியா பிரான்சிஸ்
அவர்களின்

சலங்கை மொழி பேசும்
நடனக் கலை சர்வதேசமும்
நர்த்தனம் புரிய வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அப்பம்மா - வஸ்ரியாம்பிள்ளை பிலோமினம்மா பெரியப்பா
குடும்பத்தினரான வ.யேசுதாசன் - டெஸ்சி குடும்பத்தினர் வ.டேவிற் -
மேரிமலர் குடும்பத்தினர் சித்தப்பா வ.விக்ரர் செல்வி குடும்பத்தினர்
பெரியத்தை கிறிஸ்ரி - மரியநாயகி குடும்பத்தினர் சின்னத்தை விக்ரர் -
மேரி லூசியா குடும்பத்தினர் குட்டியத்தை ஐயாத்துரை - றுக்குமணி
குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள்
(983)



பரத நாட்டிய அரங்கேற்ற அழைப்பிதழ்



அன்புடையீர்
சலங்கை நர்த்தனாலய அதிபர்(நெதர்லாந்து
இங்கிலாந்து ஜெர்மனி) நாட்டிய கலா நர்த்தகி, நாட்டிய
விஷாரத் ஸ்ரீமதி ஜெயந்தி யோகராஜா அவர்களின்
மாணவியும் எமது புதல்வியுமான
செல்வி சிந்தியா பிரான்சிஸ்
அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்
எதிர்வரும் 14.11.2004 (இன்று)
ஞாயிற்றுக்கிழமை மாலை 15.00 மணிக்கு
நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள்
எல்லோரும் வருகை தந்து, நிகழ்ச்சியை
சிறப்பித்து செல்வியை ஆசீர்வதித்தேகுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

கலையரங்கம்:
DE METROPOLE THEATRE
METROPOLE STR.11
1315 KK ALMERE
Tel - 0365488222
(CS இற்கு முன்பாக)

தாங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி பிரான்சிஸ் குடும்பத்தினர்
PIANOWEG - 74
1312 JH - ALMERE - NETHERLAND
PH - 0365469697
MOBILE- 0617546797

# ஆளும் கூட்டணிக் கட்சிகளிடையே எந்தக் கருத்து வேறுபாடுமில்லை

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானத்தையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்த சகல அரசியல் கட்சிகளிலும் வேறுபாடுகளை மறந்து, ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கேட்டுள்ளார்.

ஜனாதிபதி பதவியை ஏற்று 10 ஆண்டுகள் பூர்த்திசெய்யும் நிகழ்ச்சி கம்பஹா சிறிபோதி மைதானத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றபோதே, ஜனாதிபதி சந்திரிகா இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

1994 ஆம் ஆண்டு அதிகாரத்துக்கு வந்தபோது, நாடு பயங்கரவாதம், ஊழல், ஜனநாயக சீர்குலைவு ஆகியவற்றில் நாடு தள்ளப்பட்டிருந்தது.

1994ஆம் ஆண்டுக்குப் பின்னர் சமாதானத்துக்கு இடப்பட்ட அடித்தளம் 2001 ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க அளவு சீர்குலைக்கப்பட்டது.

ஆயினும், இந்த அரசாங்கம் சமாதான நடைமுறையில் முன் எடுத்துச் செல்ல உறுதி பூண்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டில் பற்றுள்ள அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு அவசியமானது.

எதிர்க்கட்சியினர் - சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி. பிக்குமிடையே மோசமான நெருக்கடி இருப்பதாகக் காட்டுவதற்கு முற்பட்டு வருகின்றனர். இதற்கு எதிரணி ஊடகங்களும் துணை போகின்றன. அரசாங்கத்தில் இரு பிரதான கட்சிகளுக்கிடையே வேறுபாடு கிடையாது.

மக்களின் மேம்பாட்டுக்காக அரசாங்கம் பல அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது. மேலும் பல திட்டங்கள் எம்மால் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாகவும் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார்.

## கடும் பனிமூட்டத்தால்

# கட்டுநாயக்க விமான நிலையம் சில மணிநேரம் மூடப்பட்டது!

பனிமூட்டத்தால், ஓடு பாதை தெளிவாகத் தெரியாததால், நேற்று முன்தினம் காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.

நேற்று முன்தினம் காலை - பனி மூட்டத்தால் ஓடு பாதையைத் தெளிவாக அறிந்திருக்கமுடியாதநிலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஏற்பட்டிருந்தது.

இதையடுத்து, கட்டுநாயக்க விமான நிலையம் நேற்று முன்தினம் காலை தற்காலிகமாகச் சிலமணி நேரம் மூடப்பட்டதுடன், இங்கு தரையிறங்க வந்த விமானங்கள் சிலவும் மாலைதீவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸ் அதிகாரி ஒருவர், தகவல் வெளியிடுகையில் -

தமது நிறுவனத்துக்குச் சொந்தமான குவைத் மற்றும் இந்தியாவிலிருந்து வந்த இரண்டு விமானங்கள் மாலைதீவுக்குத் திருப்பப்பட்டதாகத் தெரிவித்தார்.

பின்னர், பனிமூட்டம் விலகி, போதிய வெளிச்சம் வந்தவுடன், மூடப்பட்ட விமான நிலையம் மீளத் திறக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## புத்தளம் நகரில் கலவரம்

# பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பதின்னான்கு பொதுமக்கள் காயம்!

(கொழும்பு)

புத்தளம் நகரிலுள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐந்து தனியார் பஸ்கள் மற்றும் ஓட்டோ ஆகியவற்றை மக்கள் மயப்பட்ட பஸ் கம்பனி ஊழியர்கள் நேற்று முன்தினம் மாலை அடித்து நொருக்கினர்.

நான்கு பஸ்களில் வந்த நூற்றுக்கும் அதிகமான பஸ் கம்பனி ஊழியர்கள் - தனியார் பஸ் ஊழியர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டனர். இதனை அடுத்து பஸ் கம்பனி ஊழியர்கள் கற்களால் தனியார் பஸ்களைத் தாக்கினர்.

இதேவேளை - புத்தளம் பொலிஸார் அந்த இடத்துக்கு விரைந்து றப்பர் குண்டுகளால் துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், தடியடிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஆறுபேர் காயங்களுக்குள்ளான நிலையில் புத்தளம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை - புத்தளம் சந்தியில் ரயர்கள் எரிக்கப்பட்டு, வீதிப் போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்தப்பட்டது.

பிந்திக் கிடைத்த செய்திகளின் படி, பொலிஸாரின் றப்பர்க்குண்டுத் தாக்குதல் காரணமாகப் 14 பேர் காயமடைந்து, புத்தளம் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

# ஈராக் செல்லவேண்டாம்; அரசாங்கம் அறிவிப்பு!

(கொழும்பு)

ஈராக்கில் வேலை தேடிச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு நாட்டுமக்களுக்கு அரசாங்கம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

ஈராக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் வன்முறைகள் மற்றும் வெளிநாட்டவர்கள் தொடர்ச்சியாகக் கடத்தப்பட்டுவரும் சம்பவங்களை அடுத்தே அரசாங்கம் ஆலோசனையைத் தெரிவித்துள்ளது -

இலங்கையரான தினேஷ் ராஜரத்தினம் கடத்தப்பட்டு, இவரது கதி தெரியாத நிலையில் இலங்கை அரசு ஈராக்குக்கு வேலை தேடிச் செல்ல வேண்டாம் எனக் கோரியுள்ளது.

தற்போது ஈராக்கில் சுமார் 500 இலங்கையர்கள் தொழில் புரிவதாகவும், இவர்களில் அநேகமானோர் அமெரிக்க இராணுவ முகாம்களில் பணியாற்றுவதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டுக்கு ஆட்களை

# அனுப்ப முயற்சித்த ஏஜென்சிக்கு 39 வருட கடூழியச் சிறைத்தண்டனை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் 9 இலங்கைக் கடவுச்சீட்டுக்களையும், செச்சினிய நாட்டுக்குச் செல்வதற்கான விசாக்களையும் வைத்திருந்த தென்னாபிரிக்க பிரஜை ஒருவருக்கு கொழும்பு கோட்டே நீதிமன்றம் 39 வருட சிறைத் தண்டனை வழங்கியுள்ளது. ஒருமில்லியன் ரூபாவை குற்றப் பணமாகச் செலுத்துமாறும் உத்தரவிட்டது.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த கணேசமூர்த்தி என அழைக்கப்படும் நெவில் சௌமியமூர்த்தி என்பவருக்கே கொழும்பு கோட்டே நீதிவான் குசல சறோஜினி அபேயவர்த்தன இந்தத் தண்டனையை வழங்கியுள்ளார்.

இந்த நபர் இணையத்தளம் ஒன்றின் மூலம் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை வழங்குவதாக விளம்பரப்படுத்தியுள்ளார். இதனைத் தொடர்ந்து இலங்கையைச் சேர்ந்த 20 வயது இளைஞர் ஒருவர் இவருடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்ததைத் தொடர்ந்து, அந்த இளைஞனைச் சந்திக்க, 2002 ஆம் ஆண்டு இலங்கை வந்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி இவரைக் கைதுசெய்ய புலனாய்வுத்துறை பொலிஸார் சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்கு, இலங்கையர்களை அனுப்பிவைப்பதற்காகவே இலங்கை வந்திருந்ததாக குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்த நிலையில் சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து, கோட்டே நீதிவான் இந்தத் தண்டனையை வழங்கியுள்ளார்.

# விடுமுறையில் சென்ற 3000 படையினர் வடபகுதிக்கு திரும்ப முடியாத நிலையில்!

## இந்தியாவின் உதவியைக் கோர முடிவு

(கொழும்பு)

விமானப் போக்குவரத்து மற்றும் கடல்வழிப் போக்குவரத்தில், தடங்கல்கள் ஏற்பட்டிருப்பதால் யாழ். குடாநாட்டு இராணுவ முகாங்களில் பணியாற்றித் தமது வீடுகளுக்கு விடுமுறையில் சென்ற மூவாயிரம் படையினர் மீளவும் கடமைக்குத் திரும்ப முடியாமல் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருப்பதாகவும், இந்த நெருக்கடியைத் தீர்க்க இந்தியக் கடற்படையின் உதவியை நாட முடிவு செய்திருப்பதாகவும் தெரியவருகிறது.

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் இருந்து கிடைத்த தகவல்களின் படி மேலும் தெரியவருவதாவது -

பலாலி விமானத் தளத்தில் ஓடு பாதை புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதாலும் - பருவமழைக் காலம் ஆரம்பித்துள்ளதை அடுத்து, கடற்கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதாலும் வடபகுதிக்கான விமானம் மற்றும் கடற்போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

. இதனால், விடுமுறையில் வீடுகளுக்குச் சென்ற மூவாயிரத்துக்கும் அதிகமான படையினர் மீளவும் வடபகுதியிலுள்ள முகாங்களுக்கு திரும்ப முடியாத நிலையில் உள்ளனர்.

இதனால் பாதுகாப்பு நிலைமை நெருக்கடிக்குள்ளாகியிருப்பதாகப் படைவட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் போக்குவரத்து நெருக்கடியால் இரத்மலானை, திருகோணமலை, அநுராதபுரம் ஆகிய இடைத்தங்கல் முகாம்களில் மூவாயிரம் படையினர் தங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

குடும்பத்தினரிடம் விடுமுறையில் சென்றுவிட்டு வந்த படையினர், இந்த முகாம்களில் தங்கியிருப்பதால், நிதிப் பிரச்சினைகளை எதிர்நோக்கியிருப்பதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னர் வடபகுதிக்குப் படையினரை ஏற்றியிறக்கும் பணியில் தினமும் இரண்டு விமானங்கள் ஈடுபட்டு வந்தன. ஒரு விமானத்தில் 47 படையினரை மட்டும் ஏற்றிச் செல்லலாம். இதைவிட நான்கு எம்.ஐ 17 ஹெலிகளும் படையினரை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டு வந்தன. இவற்றில் தலா 27 படையினரை ஏற்றிச் செல்ல முடியும்.

பலாலி விமான ஓடுபாதை புனரமைப்புப் பணியால் இந்த விமானப் போக்குவரத்துக்களில் தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இதேவேளை - படையினரை ஏற்றிச்செல்லப் பயன்படுத்தப்பட்டு வந்த இரண்டு கடற்படைக் கப்பல்களில் ஒன்று பழுதடைந்திருப்பதாகவும், மற்றையது கடற் கொந்தளிப்புக் காலத்தில் பயணத்துக்கு ஏற்றதல்ல என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நொருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் இந்தியக் கடற்படையிடமிருந்து கப்பல் ஒன்றை வாடகைக்குப் பெறவும் பேர்ள் குரூசர் என்ற தனியார் கப்பலை மீள் வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும் பாதுகாப்பு அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர் எனவும் தெரியவருகிறது.

# 45 பிரதேசசபை தலைவர்கள் ஆளும் கட்சிக்கு மாறுவராம்!

## அமைச்சர் ஜானக பண்டார தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 45 பிரதேச சபைத் தலைவர்கள் வெகு விரைவில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணையவுள்ளதாக அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

தம்புள்ளவில் உள்ள பொகோரன்ஸீங் விவசாயக் கிராமத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், தான் நீண்டகாலமாக பிரதேச சபையில் வேலை செய்த பின்னரே அமைச்சரானதாகவும், இலங்கையில் உள்ள 295 பிரதேச சபைத் தலைவர்களையும் அண்மையில் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும், இது போன்ற சந்தர்ப்பம் இனிவரும் காலங்களில் கிடைப்பது அரிது எனவும் தெரிவித்தார்.

# இடைக்கால நிர்வாகம் பரிசீலிக்கப்பட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவோம்

## ஜே.வி.பி. எச்சரிக்கை

விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள தன்னாட்சியுள்ள இடைக்கால நிர்வாக யோசனை அடிப்படையில், சமாதானப் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்படுமானால், அரசாங்கத்திலிருந்து தாம் வெளியேற நேரிடும் என அரசாங்கத்துக்கு ஜே.வி.பி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கையை ஜே.வி.பி. ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாக, அரசாங்கத்துடன் தொடர்புடைய தகவல்கள் தெரிவித்தன.

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது என்றால், விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்படக் கூடாது என்றும்,

அப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டால் அமைச்சு பதவிகளைத் துறந்து, எதிரக் கட்சி வரிசையில் அமர நேரிடும் என, ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை ஜே.வி.பி.யின் இந்த எதிர்ப்பு காரணமாக, உத்தேச இடைக்கால நிர்வாக யோசனை என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காமல், வேறு பெயர் பிரயோகம் ஒன்றைப் பயன்படுத்திப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தி வருகிறார்.

இது பற்றி நோர்வே ஊடாக விடுதலைப் புலிகளுக்கு இறுதியாக அறிவித்துள்ள போதிலும், விடுதலைப் புலிகள் தரப்பு அதனை நிராகரித்து விட்டதாக மற்றுமொரு தகவல் கூறுகின்றது.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்.மாவட்டத்துக்கு நிவாரணத்துக்கு வழங்கப்படும் புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி கோரல்

1) யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு 2004 செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான தீட்டல்பச்சை அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவுசெய்யப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிட்மிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேல்குறிப்பிடப் பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் வழங் கப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு (MT) | | | |
|---|---|---|---|---|---|
| | | 2004 செப்ரெம்பர் | 2004 ஒக்ரோபர் | 2004 நவம்பர் | 2004 டிசெம்பர் |
| 1 | சாவகச்சேரி | 95 | 95 | 95 | 95 |
| 2 | கைதடி | 35 | 35 | 35 | 35 |
| 3 | கொடிகாமம் | 68 | 68 | 68 | 68 |
| 4 | உடுப்பிட்டி | 16 | 16 | 16 | 16 |
| 5 | கட்டைவேலி -நெல்லியடி | 22 | 22 | 22 | 22 |
| 6 | பருத்தித்துறை | 57 | 57 | 57 | 57 |
| 7 | புலோலி | 13 | 13 | 13 | 13 |
| 8 | மருதங்கேணி | 40 | 40 | 40 | 40 |
| 9 | யாழ்ப்பாணம் | 156 | 156 | 156 | 156 |
| 10 | நல்லூர் | 80 | 80 | 80 | 80 |
| 11 | அச்சுவேலி | 77 | 77 | 77 | 77 |
| 12 | நீர்வேலி | 58 | 58 | 58 | 58 |
| 13 | மானிப்பாய் | 66 | 66 | 66 | 66 |
| 14 | பண்டத்தரிப்பு | 45 | 45 | 45 | 45 |
| 15 | அளவெட்டி - மல்லாகம் | 32 | 32 | 32 | 32 |
| 16 | தெல்லிப்பழை | 75 | 75 | 75 | 75 |
| 17 | சங்கானை | 91 | 91 | 91 | 91 |
| 18 | சுன்னாகம் | 98 | 98 | 98 | 98 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 20 | 20 | 20 | 20 |
| 20 | வேலணை | 22 | 22 | 22 | 22 |
| 21 | ஊர்காவற்துறை | 35 | 35 | 35 | 35 |
| 22 | காரைநகர் | 28 | 28 | 28 | 28 |
| 23 | தீவகம் | 06 | 06 | 06 | 06 |
| 24 | நெடுந்தீவு | 15 | 15 | 15 | 15 |
| | மொத்தம் | 1250 | 1250 | 1250 | 1250 |

2) கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கேற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

3) கேள்விகள் சமர்ப்பிக்க விரும்பும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500 ஐ யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2004.11.15 ஆம் திகதி தொடக்கம் 2004.11.29 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இந்த வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதி பருடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

4) மீளளிக்கமுடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா 500 ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

5) கேள்வி கோரப்பட்டுள்ள அரிசி தீட்டல் பச்சை அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

6) பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ / தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 29.11.2004 பிற்பகல் 2 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

7) கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "தீட்டல் பச்சை அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.

8) கேள்வி காரர்கள்(**Bidders**) குறிப்பிடப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

9) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10 வீதம் மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயற்படுத்தல் முறிக்காக (**Performance Bond**) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

10) கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எந்தக் காரணம் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

11) கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**செ.பத்மநாதன்,**
**தலைவர்/அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச் சபை/மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்,**
**12.11.2004**

(சி-3363)

# ஆப்கானின் சுதந்திர விடுதலைக்கு ஆதரவாளர்கள் போராடவேண்டும்!

## முல்லா ஓமரின் புதிய செய்தியில் தெரிவிப்பு



ஆப்கானின் சுதந்திர விடு தலைக்காகப் போராடுவதற்கு தனது ஆதரவாளர்கள் உறுதி யெடுத்துக்கொள்ள வேண்டு மென தலிபான் தலைவர் முல்லா ஓமர் புதிய செய்தி யொன்றை அனுப்பியுள்ளார்.

இஸ்லாமியரின் ரம்ழான் தினம் கொண்டாடப்படும் வேளை ஆப்கானிலுள்ள இஸ் லாமிய பத்திரிகை ஒன்றுக்கு இரண்டு பக்கம் அடங்கலாக இந்தச் செய்தியை அவர் அனுப்பியுள்ளார்.

அவரது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தலிபான் அமைப்பானது முன்னரைவிட மிகப்பெரிய எண்ணிக்கையுடன் உயர்ந்த அளவில் சகோதரத்துவம் மற்றும் ஒழுங்கான கட்டுக்கோப்புடன் உள்ளது. ஜிகாத்மூலமோ அல்லது புனிதப் போரோ நடத்தப்படுவது தலிபான் மீண்டும் அதிகாரத்திற்கு வரவேண்டும் என்ற நோக்கத்திற்காக அல்ல.

அமெரிக்கா தனது தவறான கொள்கையின் மூலம் ஆப்கானை தவ றான பாதைக்கு இட்டுச்செல்கிறது. வேறுபட்டமுறை மற்றும் வேறுபட்ட திட்டமிடல் மூலம் ஆப்கானின் அரசியலமைப்பு மற்றும் தேர்தல் முறைகள் என்பன மாற்றப்பட்டுள்ளன. இது ஒரு போலியான ஜனநாயகமாகும்.

நான் உங்களை விடமாட்டேன் உங்களது நம்பிக்கைகளும் சிதைக்கப் படும் வரலாற்றில் நான் வெட்கக்கேடான முறையில் விலகமாட்டேன். எமது சந்ததியினருக்கான உரிமைகளுக்காக போராட்டம் தொடரும

தலிபான் ஆட்சியில் இருக்கவேண்டுமென்று விரும்பியிருந்தால் அல் லது வேறு ஏதாவது அனுகூலங்களைப் பெறவேண்டியிருந்திருந்தால் அது அமெரிக்காவை அனுசரித்துப்போயிருக்கும். எனவும் அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேலின் முன்னாள் — அனுவாயுத தொழில்நுட்பவியலாளர் மீண்டும் கைதுசெய்யப்பட்டார்!



இஸ்ரேலிய அணுவாயுதங்கள் தொடர்பான இரகசியத் தகவல் களை பிரிட்டன் பத்திரிகை ஒன் றுக்கு வழங்கியதாகத் தெரிவித்து 1986 ஆம் ஆண்டு சிறையில் அடைக கப்பட்ட இஸ்ரேலின் முன்னாள் அணுவாயுதத் தொழில்நுட்பவியலா ளரான மொடே சாய் வனூனு 18 வருடங்களின் பின்னர் கடந்த ஏப் ரல் மாதம் விடுதலை செய்யப்படடார்.

இவ்வாறு விடுதலை செய்யப் பட்ட வானூனு மீளவும் அணுவாயு தங்கள் தொடர்பான தகவல்களை வெளியிட்டார் எனத் தெரிவித்து இஸ்ரேலியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் விடுதலை செய்யப்பட்ட வானூனு வெளிநாட்டு ஊடகங்களுக்கு எவ்வித பேட்டியும் வழங்கக்கூடாதென கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்ட நிலை யிலேயே விடுதலை செய்யப்பட்டார்.

ஆனால், வானூனு கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் பி.பி.சி. தொலைக்காட்சிச் சேவைக்கு பேட்டி யளித்திருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டார்.

வானூனு கடந்த ஏப்ரலில் விடு தலை செய்யப்பட்ட பின்னர் ஜெரு சலேமிலுள்ள தேவாலயமொன்றில் பாதிரியார் றியா அபு எல் - அசாயு டன் வாழ்ந்து வந்தார். இவ்வாறு வாழ்ந்த இவரை சுமார் 30 தொடக் கம் 50 வரையிலான பொலிஸார் கைதுசெய்து கொண்டு சென்றனர்.

வானூனு 1986 ஆம் ஆண்டு கைதுசெய்யப்படுவதற்கு முன்னர் லண்டனில் தலைமறைவு வாழ்க்கை நடத்திவந்தார். இவ்வாறு தலை மறைவு வாழ்க்கை நடத்திய இவ ருடன் இஸ்ரேலிய பெண் உளவாளி இரகசியத் தொடர்புகளை ஏற்படுத்தி இவரை ரோமில் சந்திக்கவிரும்பு வதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் இவர் ரோமுக் குச் செல்லவே அங்கு ஏற்கனவே தயார்நிலையில் இருந்த இஸ்ரே லிய உளவாளிகள் இவரைப் பிடித்து கப்பல் மூலம் இஸ்ரேலுக்கு கொணடு சென்றமை குறிப்பிடத்தக்கது.

## உலக நோக்கு


## சிறு விளம்பரம்

**வீடு விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் சுண்டிக்குளி கச் சேரி கிழக்கு ஒழுங்கையில் 31/4 பரப் புடைய காணி வீடு விற்பனைக்கு உண்டு. மேலதிக தொடர்புகளுக்கு: 0777 145282** (C/3022)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
இந்தியன் புரூஸ்லி தனுஷ், தியா நடித்த
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.30, 6.30, 9.00 (பு.நே)
(சி-3319)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
R.B.சௌத்திரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல்
நடித்த
**சத்ரபதி** (ரீல்ஸ்)



முற்பதிவுகளுக்கு
யாழ்.பெயின்ற் காடன், நாகம்ஸ் சினிமா
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00.10.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான



அஜித் இருவேடங்களில், பூஜா நடித்த
**அட்டகாசம்**
பு.நே 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

**நிறஞ்சனாஸ்** சங்கானை
ரவி கிருஷ்ணா, சோனியா அகவர்வால் நடித்த
7/G றெயின்போ காலனி
**கேம்பஸ்** (ரீல்ஸ்)
விசேட காட்சி: இரவு 9.00 மணிக்கு (பு.நே)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி-2723)

# குளமாகக் காட்சியளிக்கும் யாழ்.பஸ்தரிப்பு நிலையம்

யாழ்.பிரதான பஸ் தரிப்பிடத்தில் 782,784,785,786,787,788,789 ஆகிய இலக்கங்களையுடைய பஸ்கள் - தரித்து நிற்கும் பஸ் தரிப்பிடக் கட்டடத்துக்குள் மழைநீர் தேங்கி நிற்பதால், மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பிட்ட கட்டடக் கூரையின் மேலுள்ள பீலியால் ஓடும் நீரானது, குறிப்பிட்ட கட்டடத்தின் உள்ளே பெரும் நீர் வீழ்ச்சிபோல பாய்கிறது.

இதனால், குறிப்பிட்ட பஸ் தரிப்பிடக் கட்டடத்தினுள் மழைபெய்யும் போது, மக்கள் நிற்க முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளதுடன், பெரும் சுகாதார சீர்கேடும் உருவாகி வருகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் உடனடியா நடவடிக்கை எடுத்து, இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும் எனப் பிரயாணிகள் தெரிவித்தனர். (207)

## ஜனவரி முதல் 1210.1 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவு

2004 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் - நவம்பர் 11 ஆம் திகதி வரை 1210.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி யாழ். குடாநாட்டில் பதிவாகியுள்ளதாக, திருநெல்வேலி வளி மண்டல ஆராய்ச்சி நிலையத் தரவுகள் தெரிவித்தன.

ஒக்ரோபர் மாதம் - 340.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், நவம்பர் 1-11 ஆம் திகதி வரையான தினங்களில் 226.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதியப்பட்டுள்ளதாக அந்தத் தரவுகள் மேலும் தெரிவித்தன. (63)

# இரு தங்க நாணயங்களை வென்ற அதிர்ஷ்டசாலி

மக்கள் வங்கியின் ஜயஸ்ரீ மாதாந்த சீட்டிழுப்பில் சங்கானையைச் சேர்ந்த வைரமுத்து கிருஷ்ணதாசன் என்பவர் மே, ஜூலை மாதங்களுக்கான சீட்டிழுப்பில் தெரிவு செய்யப்பட்டு, இரண்டு தங்க நாணயங்களைப் பரிசாகப் பெற்றுள்ளார். இவருடன் சாந்தினி சிவனேசன் (சித்தங்கேணி), நி.நித்தியானந்த லக்சுமி (அராலி), பூமணி ஆறுமுகம் (சித்தங்கேணி) ஆகியோரும் அதிர்ஸ்டசாலிகளாகத் தெரிவாகி, தங்க நாணயங்களைப் பரிசாகப் பெற்றுள்ளனர்.

இந்தப் பரிசுகளை - மக்கள் வங்கியின் யாழ்.மாவட்ட பிரதேச முகாமையாளர் கே.சிவபாதவிருதயரும், சங்கானை மக்கள் முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளையும் வங்கியில் நடைபெற்ற வைபவமொன்றில் வழங்கிச் சிறப்பித்தனர். (48)

# மாணவர்களின் ஆங்கில அறிவு விருத்திக்கு ஆசிரியர்களே பெரும் பங்காற்ற வேண்டும்

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



மாணவர்கள் ஆங்கில அறிவை நன்கு வளர்த்துக் கொள்ளவேண்டும். இதற்கு ஆசிரிய சமுதாயம் மிகவும் கவனமெடுத்து, மாணவர்களை ஊக்கப்படுத்தவேண்டும்.

இவ்வாறு கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியின் கணினி அறைத் திறப்பு விழாவில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கி.கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் ச.ஸ்ரீஇராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், கஜேந்திரகுமார் தொடர்ந்து உரையாற்றுகையில் -

பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு, எத்தனையோ பட்டதாரிகள் வேலை வாய்ப்பைப் பெறமுடியாமல் கஷ்டப் படுகிறார்கள்.

இப்போது தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கும் ஆங்கில அறிவு மிக முக்கியமானதாகவுள்ளது.

ஆகவே, மாணவர்கள் ஆங்கில அறிவை நன்கு வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு ஆசிரியர் சமூகம் மிகவும் அக்கறை கொண்டு, மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

பெற்றோர்களைப் பொறுத்தவரை தமது பிள்ளைகள் பாடசாலையில் கல்வி கற்கிறார்கள், உயர் வகுப்புப் படிக்கிறார்கள் என்றே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், தமது பிள்ளைகளின் கல்வித் தரத்தை பரிசோதித்துப் பார்ப்பதில்லை. ஆகவே ஆசிரியர்கள் இதில் கவனமெடுத்து மாணவர்களின் கல்வி நிலையை மேலோங்கச் செய்ய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இன்று எமது பிரதேசத்தின் கல்வி நிலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு யுத்த நடவடிக்கைகளும் ஒரு காரணமாகும்.

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 50 லட்சம் ரூபா மாத்திரமே ஒதுக்குகிறார்கள். அவையும் உரியகாலத்தில் கிடைப்பதில்லை. அந்தப் பணத்தை கொண்டே நாம் எமது பிரதேசத்தில் ஒவ்வொரு துறைக்கும் நிதியை ஒதுக்கி வருகிறோம்.

முன்னுரிமை அடிப்படையில் பின்தங்கிய பாடசாலைகளுக்கும் மற்றும் அபிவிருத்திக்கும் நிதிகளை ஒதுக்கி வருகிறோம்.

இந்தப் பாடசாலையைப் பொறுத்தவரை மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அடுத்தவருடம் நிதி ஒதுக்கீட்டில் உதவி செய்ய எண்ணியுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (17)

# வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 234 குடும்பங்களுக்கு கொடுப்பனவு

வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள எட்டு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 234 குடும்பங்கள் - 25 ஆயிரம் ரூபா மீளக் குடியமர்வுக் கொடுப்பனவைப் பெறவுள்ளன.

வட்டு வடக்கு (யா/158) - 25, அராலி மேற்கு (யா/160) - 14, அராலி தெற்கு (யா/162) - 45, அராலி கிழக்கு (யா/163) - 20, வட்டு மேற்கு (யா/165) - 40, வட்டு கிழக்கு (யா/157) - 18, அராலி வடக்கு (யா/164) - 48, சங்கரத்தை (யா/159) கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 234 குடும்பங்கள் இந்தக் கொடுப்பனவைப் பெறவுள்ளன.

2002 ஆம் ஆண்டு மாசி மாதத்துக்குப் பின் ஏ-9 பாதையால் யாழ். மாவட்டத்தில் குடியேறிய இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 234 குடும்பங்களே இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளத் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான 58,50,000 ரூபாவை 'நிகொட்' நிறுவனம் வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கான கொடுப்பனவு எதிர்வரும் வாரங்களில் வழங்கப்படும் என்றும், தெரிவானோருக்கான அறிவித்தல் கடிதமூலம் அனுப்பி வைக்கப்படுமெனவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. (48)

## பிரிவுபசார விழா

வலி.கிழக்கு பிரதேச சபையில் ஓய்வு, இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் பிரிவு உபசாரவிழா - ஊழியர் நலன்புரிச் சங்கத்தலைவர் க. வரதராஜன் தலைமையில் நீர்வேலி மாதர் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

# சாரதி அனுமதிப் பரீட்சகர் வராததால் ஏமாற்றம்

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப்பரீட்சை நடைபெறும் தினமன்று, பரீட்சகர் வருகை தரவில்லை எனக் காரணம் கூறப்பட்டு, அன்றையதினம் செயன்முறைப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதால், பெருந்தொகையான பரீட்சார்த்திகள் பாதிக்கப்பட்டனர்.

சென்ற மாதம் 14 ஆம் திகதி நடந்த எழுத்துப் பரீட்சையில், சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கான செயன்முறைப் பரீட்சை - கடந்த 9 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

எனவே, பரீட்சார்த்திகள் அன்றைதினம் தமது அனைத்து அலுவல்களையும் ஒதுக்கி விட்டு, பரீட்சைக்காக வருகை தந்திருந்தனர்.

ஆனால் அன்று பரீட்சகர் வேறு மாவட்டத்திலிருந்து வருகை தரவில்லை என்று காரணம் கூறப்பட்டு, பரீட்சை வேறொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பல்வேறு தேவைகளை ஒதுக்கி வைத்து பரீட்சைக்காக வந்திருந்த பெருந்தொகையானவர்கள் - அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் பெரும் பாதிப்படைந்தனர்.

அத்துடன், வாகனங்களுக்கான செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்ற வந்திருந்தவர்கள் பல ஆயிரக் கணக்கான ரூபாககளைக் கொடுத்து, வாடகைக்கு வாகனங்களைப் பெற்று வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (207)

# வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உதவி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்போது பெய்துவரும் கடும்மழை காரணமாக - வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொம்மைவெளி, காக்கைதீவு, வசந்தபுரம் கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு - தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். கிளையால், வெள்ள நிவாரணப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். கிளைப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் தலைமையிலான குழுவினர் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசி, மா, பருப்பு, சீனி, பால்மா, நுளம்பு வலை உட்பட அத்தியாவசிய உதவிப் பொருட்களை வழங்கினர்.

## மாவீரர் துயிலும் இல்லம் புனரமைப்பு

(கோப்பாய்)

மாவீரர் தினத்தையொட்டி பொது அமைப்புக்கள் மற்றும் தனியார் துறையினரின் உதவியுடன், கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லமும், அதனை அண்டிய பகுதிகளும், இராஜ வீதியும் - சிரமதானமுறையில் துப்பரவு செய்யப்பட்டன. (80)

## தேனரும்பு சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

புனித மாட்டினார் குருமட மாணவர்களால் தேனரும்பு கையெழுத்து சஞ்சிகை இன்று ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படவுள்ளது.

அருட்பணி கிருபாகரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (91)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : ர.தேனுஜா
முகவரி : கொடிகாமம்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :---------------------

முகவரி :---------------------

பிறந்த ஆண்டு:---------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------------

பெற்றோர் ஒப்பம்


# நிகொட் நிறுவன வேலைத் திட்டம்

(யாழ்பாணம்)

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில், சங்கானை தெற்கு கிராம சேவையாளர் பகுதிக்குட்பட்ட ஓடக்கரை வீதி புனரமைப்புக்கென ரூபா 1,794,000 மும், பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் கேணிப் புனரமைப்புக்கென ரூபா 1,80,000 பிள்ளையார் கோயில் கேணி புனரமைப்புக்கென ரூபா 2,54,000 மும், சுழிபுரம் பாண்டவெட்டை பாலர் பாடசாலைப் புனரமைப்புக்கென ரூபா 8,22,000 மும், 'நிகொட்' நிறுவனத்தின் முன்னாயத்த நடவடிக்கை வேலைத் திட்டத்தின் கீழ், சங்கானைப் பிரதேச செயலகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டங்கள் அந்தந்தப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், சமுர்த்தி செயலணி ஊடாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலர் மேற கொண்டுள்ளார். (48)

# ஸ்ரான்லிக் கல்லூரியில் கணினிப் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் (ஸ்ரான்லிக் கல்லூரி) கல்வித் திணைக்களம் என்.ஐ.ஐ.ரி (NIIT) யின் ஆதரவுடன், வலய மட்டத்திலான ஆசிரியர்களுக்கு கணினிப்பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டு வருகிறது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில், யாழ்ப்பாண வலயத்துக்குட்பட்ட 20 பாடசாலைகளிலிருந்தும் - தலா ஒவ்வொரு ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டு, கணினிப் பயிற்சிகளைப் பெறுகின்றனர்.


கடந்த மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 3 வாரங்களாக இடம்பெறும் இந்த பயிற்சிப் பட்டறை இன்றுடன் முடிவடைவதால், அடுத்த பயிற்சிப்பட்டறை (எட்டாவது குழு) எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இது மூன்று வாரங்களாகத் தொடர்ந்து நடைபெற்று, அடுத்த மாதம் 4 ஆம் திகதியுடன் முடிவடையும். (55)

# விளையாட்டு அரங்கம்




## அந்தநாள் ஞாபகம் வந்ததே நண்பனே



பில்லோறி
நெஞ்சம் மறப்பதில்லை

சர்வதேசக் கிரிக்கெட் உலகின் ஆஷஸ் தொடர்தான் அதிகபிரபல்யம் என்பது போய், போடர் -கவாஸ்கர் தொடர் மிகப்பிரபல்யம் ஆகப்போகிறது என்பதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன. இனி அடுத்த இந்திய மண்ணிலான டெஸ்ட் தொடர் 2010 இல் தான் நடைபெறும் என்ற நிலையில், ஏன் இரண்டு வருடத்துக்கு ஒருமுறையாக இந்தத் தொடரைமாற்றக் கூடாது என்ற விருப்பம் பலதரப்பில் இருந்தும் தெரிவிக்கப்படுவதில் இருந்து இதன் ஆர்வம் விளங்கும்.

ஒருவாறாக ஸ்ரீவ்வோ விரும்பிய இறுதிப் போர் முனையை (The Last Frontier) கில்கிறிஸ்ட் அவுஸ்ரேலியாவுக்கு வென்று கொடுத்துவிட்டார். இது ஒரு வரலாறு. இந்த வரலாற்றுக்குள் இறுதியாக இந்தியா ஒரு வரலாற்றை எழுதிய கதை இன்னொருவரலாறு.

இது ஒருபுறம் இருக்க, 1969 இல் இந்திய மண்ணில் இந்தியாவைத் தோற்கடித்த பின்னர் 2004 இலேயே அதாவது 35 வருடங்களுக்குப் பின்னரே அவுஸ்ரேலியாவில் இதனை சாதிக்க முடிந்தது.

1969 இல் பில் லோறி (Bill Lawry) தலைமையில் இந்தியா வந்த அணி டெஸ்ட் தொடரை 3–1 என்றவாறு கைப்பற்றிக் கொண்டது. பம்பாய், கான்பூர், டெல்கி, கல்கத்தா, சென்னை நகர்களில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் டெல்கி, டெஸ்டில் இந்தியா வென்றது. கான்பூர் டெஸ்ட் வெற்றிதோல்வியின்றி முடிவடைய ஏனைய மூன்று முதலாவது, நான்காவது, ஐந்தாவது டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்ரேலியா வென்றது. மும்பாய் டெஸ்டில் சிறீனிவாசன் வெங்கட்ராகவன் ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்டபோது மைதானத்தில் குழப்பம் நிகழ்ந்தது.



இயன் செப்பல்
அது ஒரு பொற்காலம்

இதில் சில அவுஸ்ரேலிய வீரர்கள் காயமடைந்தனர். யன்னல் கண்ணாடிகள் அனேகமாக எல்லாமே நொருக்கப் பட்டன. இவ்வளவு நடந்தும்கூட அவுஸ்ரேலியா எட்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றபோது இரண்டாவது டெஸ்ட் வெற்றி தோல்வி இன்றி முடிவடைய டெல்கி டெஸ்டில் பிஷன் சிங் பேடியும், எராபள்ளி பிரசன்னாவும் தம் சுழல் பந்து வீச்சின் மூலம் இந்தியாவிற்கு வெற்றி தேடிக் கொடுத்துத் தொடரை சமனாக்கினார்கள். கல்கத்தா டெஸ்ட் போட்டியும் அவுஸ்ரேலிய அணிக்கு ரசிகர்கள் பக்கத்தில் இருந்து அச்சுறுத்தலாகவே இருந்தது. அத்தோடு ரசிகர்கள் – பொலிஸார் மோதல் தொடர் நின்று போகும் ஆபத்துக் கூட உண்டாயிற்று. அதாவது வெற்றிக்கு அவுஸ்ரேலிய அணிக்கு இன்னமும் 39 ஓட்டங்கள் மட்டும் தேவை என்ற நிலையிலேயே, குழப்ப நிலைகள் ஏற்பட்டாலும் விடாப்பிடியாக விளையாடியே தீருவ தென்ற உறுதியினால் கல்கத்தா டெஸ்ட்டை அவுஸ்ரேலியா வென்றெடுத்தது. சென்னை வந்ததும் அவுஸ்ரேலியா தனது பௌதீகத் தேவைகள் பொறுத்து அதிருப்தியடைந்தே இருந்தது. இது ஆட்டத்தைப் பாதிக்கும் அளவுக்கு இருக்கவில்லை. மேலும் பில்லோறி தனது அணிவீரர்களின் தேவைகள் தொடர்பாக அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபையுடன் முரண்பட்டுக் கொண்ட வகையிலேயே அந்தப் பிரச்சினைகள் அமைந்திருந்தன.


பில் லோறியின் அணியில் முதன்மைத்துடுப்பாட்ட வீரராகத் திகழ்ந்தவர் இயன் செப்பல். ஐந்து டெஸ்ட்களில் இவர் குவித்த ஓட்டங்கள் 324. கீத் ஸ்டெக்போல் பம்பாயில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் சதம் போட்டார். போல் ஷீ ஹன் டெல்சி டெஸ்டில் சதம் போட்டார். இயன் செப்பல் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் 138 ஓட்டங்களும் நான்காவது டெஸ்டில் 99 ஓட்டங்களும் பெற்றார். சென்னை டெஸ்ட் போட்டியில் டக்வோல்டர்ஸ் 102 ஓட்டங்கள் பெற்றார். அவுஸ்ரேலிய வேகப் பந்துவீச்சாளர்கள் கிரஹம் மெக்கன்ஸி 21 விக்கெட்டுக்களையும், அலன் கொனலி 17 விக்கெட்டுக்களையும் சுழல் பந்துவீச்சாளர் ஆஷ்லி மலட் 28 விக்கெட்டுக்களையும் பெற்று பந்து வீச்சாளர் வரிசையில் முதன்மை பெற்றனர்.

- நிர்மலன்.

## அதிசய ராகம் ஆனந்த ராகம்

சீனப்பெருஞ்சுவர், பைசா கோபுரம், எகிப்திய பிரமிட்டுக்கள் போன்ற உலக அதிசய வரிசையில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய இன்னொரு அதிசயம் அவுஸ்ரேலியாவுடனான மும்பை டெஸ்டில் இந்தியா பெற்ற வெற்றி.

இந்த வெற்றி குறித்து அவுஸ்ரேலியப் பத்திரிகைகள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளன. ஏற்கனவே இரண்டு டெஸ்ட் போட்டிகளையும் இழந்த நிலையில் கடைசிப் போட்டியிலாவது வெற்றி பெறவேண்டும் என்பதற்காக சர்வதேச தரத்துக்கு மாறாக ஆடுகளத்தை இந்திய அணியினர் தங்களுக்குச் சாதகமாகத் தயாரித்து விட்டார்கள் என்று குற்றஞ்சாட்டியிருக்கின்றன.



நிறம் மாறும் மண்

சொந்த நாட்டில் போட்டி நடக்கும் பொழுது ஒவ்வொரு நாடும் தனக்குச் சாதகமாகவே ஆடுகளத்தை அமைத்துக்கொள்ளும். இது கிரிக்கெட்டைப் பொறுத்து வழமையான ஒன்றுதான்.

நாக்பூரில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா வெற்றிபெற்ற போது, ஆடுகளம் தங்களுக்கு சாதகமாக இருந்ததாகவும், இந்திய அணியினர் தங்களுக்கு சாதகமாக்கத் தவறிவிட்டனர் என்றும் ஷேன்வோன் உட்பட பல அவுஸ்ரேலிய வீரர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இப்போது மும்பை டெஸ்டில் தோல்வியடைந்த பிறகு அவுஸ்ரேலியப் பத்திரிகைகள் இந்தியர்கள் தங்களுக்குச் சாதகமாக ஆடுகளத்தை அமைத்துவிட்டார்கள் என்று புலம்புவது ஏற்புடையதொன்றல்ல.

இந்த வருட முற்பகுதியில் இந்திய அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தது. அங்கு முல்ரானில் விளையாடிய முதல் டெஸ்ட்டில் இனிங்ஸால் இந்திய அணி வெற்றி பெற்றிருந்தது.

அப்போது பாகிஸ்தானின் தோல்வி குறித்து வாசீம் அக்ரம் – ஆடுகளத்தை சாதகமாக்கிக்கொள்ள பாகிஸ்தானியர் தவறிவிட்டனர் என்று குற்றஞ்சாட்டியிருந்தமையும் இங்கு நினைவுகூரத்தக்கது.

எனவே, ஒவ்வொரு நாடும் தனக்குச் சாதகமாக ஆடுகளம் அமைப்பது வெளிப்படையாகப் புலனாகிறது.

2002/03 காலப்பகுதியில் ஸ்ரீவ்வோ தலைமையிலான அவுஸ்ரேலிய அணியினர் பாகிஸ்தானுடன் சார்ஜாவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியொன்றில் பாகிஸ்தான் அணியை, 59, 53 ஓட்டங்களுக்குள் சுருட்டி, வெறும் இரண்டு நாளில் இனிங்ஸால் வெற்றி பெற்றனர். அதற்காக அவுஸ்ரேலிய அணியினர் சார்ஜா மைதானம் டெஸ்ட் போட்டிகளுக்குச் சாதகமில்லை என்று கருத்துத் தெரிவித்திருந்தார்களா? என்றால் அது இல்லவே இல்லை. ஆகவே, வெற்றியடையும் போது வீரர்களின் திறமையென்றும், தோல்வியடையும் போது ஆடுகளத்தைக் குற்றஞ்சாட்டுவதும் அவர்களுக்குப் புதிதல்ல.



கவிழ்வது யார்?

உண்மையான ஆடுகளங்கள் (Genuine Pitch ) முதல் இரண்டு நாட்கள் வேகமாகவும், பந்துகள் அதிக உயரம் எழும்புவனவாகவும், பிறகு மேல் பரப்பு புற்கள் குறையக் குறைய சுழற் பந்து வீச்சாளருக்கு உதவிகரமாக இருப்பதுதான் உண்மையான ஆடுகளம். இதற்கு சிறந்த உதாரணங்களாக, கிரிக்கெட் ஜாம்பவான்களாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டவை சிட்னி, மெல்போர்ன், கொல்கத்தா, மும்பை, சென்னை ஆடுகளங்கள். இப்படிப்பட்ட மும்பை ஆடுகளத்தில் இரண்டாவது நாளில் 18 விக்கெட்டுக்களும், மூன்றாவது நாளில் 20 விக்கெட்டுக்களும் என மொத்தம் 38 விக்கெட்டுக்களை இரண்டு நாட்களில் கைப்பற்றுவதென்பது ஆரோக்கியமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கு உகந்ததொரு விடயமல்ல என்பதையும் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.

இருந்தபோதும் ஒரு நாளில் 20 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டது ஒரு சாதனையல்ல. இந்திய அணியினர் 2002 ஆம் ஆண்டு டிசம்பரில் நியூஸிலாந்துக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டபோது, ஹமில்டனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஒருநாளில் 22 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டதே சாதனையாகவுள்ளது.

- விமலன்.

## கசந்துபோகும் நல்ல மனசு

எல்லோராலும் பெரிதும் மதிக்கப்படும் ஒரு கிரிக்கெட் வீரர் அணித்தலைவர் நியூசிலாந்தின் ஸ்ரீபன் பிளெமிங். இவர் தனது சுயசரிதையில் ஆட்ட நிர்ணயம் தொடர்பாக அதிர்ச்சியான தகவ லொன்றை வெளியிட்டுள்ளார். ஆட்ட நிர்ணயம் தொடர்பில் 1999 ஆம் ஆண்டில் இவரை அணுகிய ஒரு இந்திய வர்த்தகர் தமது அமைப்பில் தன்மையும் சேர்ந்து கொள்ளுமாறும் இதற்கு விலையாக 200000 ஸ்ரேலிங் பவுண் தருவதாகவும் கூறியதாக இவர் கூறியுள்ளார்.

அந்த நபர் தன்னுடன் உரையாடிய போது உலகின் பல முதன்மை விளையாட்டு வீரர்கள் இந்த அமைப்பில் தொடர்புபட்டுள்ளார்கள். எமது அமைப்பு உலகளாவியது. மான்செஸ்ரர் உதைபந்தாட்ட அணி கவிழ்ந்தது எவ்வாறு, முக்கிய மானதொரு ரெனிஸ் சுற்றுப் போட்டியில் அன்ரீ அகாஸி தோற்றுப் போனது எவ்வாறு என்று தன்னைக் கேட்டாராம். அவர் பணத் தோட்டத்தைக் காணவேண்டுமா? எங்களுடன் சேருங்கள் என்றாராம் அந்த முகவர். முகவர் மேலும் கூறுகையில் உடனடியாக (கைமேல காசு) 200,000 ஸ்ரேலிங் பவுண்களும், ஒரு வருடத்துக்குள் இன்னும் 100,000 ஸ்ரேலிங் பவுண்களும் தரலாம் என்று கூறினாராம். இது பற்றி ஸ்ரீபன் பிளெமிங் மேலும் கூறினார். 'மம' அவர் எழுதிய இலக்கங்களை உன்னிப் பாகப் பார்த்ததும், அவரைப் பார்த்து நாங்கள் இப்படி ஒரு விடயத்தைக் கதைப்பது பற்றி நான் விரும்பவில்லை. மேலும் இப்படி ஒரு அமைப்பின் செயற்பாடுகளில் தொடர்பு கொள்ள நான் விரும்பவில்லை என்று கூறியதும் எனக்கு ஞாபகம் வருகிறது!




ஸ்ரீபன் பிளெமிங்
உயர்ந்த மனிதன்

இதன் பின் அணி முகாமையாளருக்கு இந்த விடயம் தொடர்பாகத் தான் அறிவித்தது பற்றியும் ஸ்கொட்லண் யார்ட் புலனாய்வாளர்கள் நியூசிலாந்துக்குச் சென்றதும் என்று தொடர்ந்து கூறிமுடிக்கிறார்.

ரசிகர்கள் ஸ்ரீபன் பிளெமிங் மீது வைத்திருந்த மதிப்பு இந்தச் சம்பவத்தின் பின் இன்னும் அதிகரித்திருக்குமல்லவா? மலர் வனத்தினுள் புகுந்தும் மலர் கொய்யாத ஞானி இவர்.

– ஜெயா.

# நல்ல பேரை வாங்கவேண்டும்



ஹர்பஜன் சிங் நெஞ்சிருக்கும் வரை

அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக மும்பையில் இடம்பெற்ற இறுதி டெஸ்ட் போட்டியில் 13 ஓட்டங்களால் வெற்றி பெற்று, அவுஸ்ரேலிய அணியை வஞ்சம் தீர்த்துக் கொண்டது இந்திய அணி.

ஏற்கனவே அவுஸ்ரேலிய அணியிடம் இரண்டு தோல்விகளைச் சந்தித்த இந்திய அணி மும்பை டெஸ்டில் எதிர்பாராத வெற்றியைப் பெற்றமைக்கு இந்திய அணியின் திறமைதான் காரணம் என்பது வெளிப்படையாகும்.

உலகில் நாங்களே ஜாம்பவான்கள் என மார்தட்டிக் கொள்ளும் அவுஸ்ரேலிய அணியை 107 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்துவதற்கு திறமையும், மன உறுதியும் அவசியம் என்பது மறுக்க முடியாத விடயம்.

ஆனால் எம்மையாரும் வீழ்த்தி விடமுடியாது என, சவால் விடும் அவுஸ்ரேலிய அணி ஏனையவர்களின் திறமைக்கு மதிப்பதுமில்லை. அதேபோன்று தமது தோல்வி களை ஒருபோதும் ஒப்புக் கொள்வதுமில்லை. தாம் வெற்றி பெறும் போதெல்லாம் தமது வீரர்களின் திறமையை வெற்றி பெற்றதாக கர்வத்துடன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் அவுஸ்ரேலிய அணியினர் தோல்வியைத் தழுவும் சந்தர்ப்பத்தில் ஏதோ ஒரு சாட்டைச் சொல்லி, மற்றையவர்களிலும் பார்க்க தாம் திறமை வாய்ந்தவர்கள், ஏதோ துரதிர்ஷடத்தால் தோற்றுவிட்டதாகக் கூறிவருகின்றனர்.

ஆடத் தெரியாதவன் கூடம் கோணல் என்றானாம் என்ற முதுமொழிக்கமைய இந்திய அணியிடம் கடைசி டெஸ்டில் தோற்றதற்கு ஆடுகளம் தான் காரணம் என அவுஸ்ரேலிய அணித் தலைவர் பொண்டிங் தெரிவித்தார்.

இரு அணிகளும் ஒரே ஆடுகளத்தில் துடுப்பெடுத்தாடின. பின்னர் தோல்விக்கு ஆடுகளம் தான் காரணம் எனப் பொண்டிங் தெரிவிப்பது, ஒரு பலம் வாய்ந்த அணியின் தலைவருக்குத் தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் இல்லை என்பதையே வெளிப்படுத்துகிறது.

இதேபோன்று சென்னை டெஸ்ட்டில் வெற்றி பெறுவதற்கான 99 சதவீத வாய்ப்பு இந்திய அணிக்குக் காணப்பட்ட போதும், மழை குறுக்கிடாமல் இருந்திருந்தால் தாமே வெற்றி பெற்றிருப்போம் என அவுஸ்ரேலிய அணியின் பந்து வீச்சாளர் மக்ரா திமிராகத் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அவுஸ்ரேலிய அணியால் நிர்ணயிக்கப்பட்ட 229 என்ற இலக்கு சொந்த மைதானத்தில் இந்திய அணியைப் பொறுத்தவரையில் கடினமான ஒன்றல்ல.

ஆனால் எம்மை யாரும் அசைக்க முடியாது என்கின்ற கர்வம் அவுஸ்ரேலிய அணியிடம் காணப்படுவது இன்று நேற்று தோன்றியதல்ல. அது அவுஸ்ரேலியர்களின் பிறவிக்குணம். அதுவும் ஆசிய அணிகளிடம் தாம் தோற்றால், வெற்றி பெற்ற அணி யின் வெற்றியை பெறுமதி அற்றதாக்காவிட்டால், அவுஸ்ரேலிய அணியினருக்கு நித்திரை வராது.

லாறா டெஸ்ட் போட்டிகளில் 400 ஓட்டங்களை அடித்து சாதனை படைத்த போது, லாறா சுயநலத்துக்காகவே விளையாடினார் எனப் பொண்டிங் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அவுஸ்ரேலிய அணியிடம் திறமை உண்டு என்பது மறுப்பதற்கு இல்லை. அதற்கு அப்பால் நல்ல மனப்பாங்கையும் அவுஸ்ரேலிய அணியினர் வளர்த்தெடுக்க வேண்டும்.

— லெஸ்லி.



முரளி கார்த்திக் எங்கிருந்தோ வந்தான்

# உன்னைப்போல் ஒருத்தி

இது ஒரு வித்தியாசமான செய்தி. வழக்கமாக தங்கள் முதுகில் தாங்களே தட்டி, அல்லது வேண்டிய ஒருவரைக் கொண்டு தட்டுவித்துக் கொண்டு தங்கள் விளையாட்டுச் சாதனைகளை மடை பரப்பும். இந்த நாட்டில், எம் மண்ணில், இப்படி ஒரு செய்தி எத்தகைய உணர்வை ஏற்படுத்தும். இப்படிச் சொல்வதற்கு ஒரு காரணம் உண்டு.

வளர்ந்து வரும் இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டுவோம், பாராட்டுவோம் என்பதை விடுத்து எங்கள் பாட்டனுக்கு ஒரு கொம்பன் யானை இருந்தது என்று பிரபல்யம் தேடும் நிறையச் சந்தர்ப்பங்களை இங்கு நாங்கள் கண்டிருக் கின்றோம்.

இதனால் தான் கெலி ஹோம்ஸ் அம்மையார் பற்றிய செய்தியை , இது ஒரு வித்தியாசமான செய்தி என்று குறிப்பிடுகிறோம். ஏதென்ஸ் இரட்டைத் தங்கச் சொந்தக்காரி கெலி ஹோம்ஸ் தான் இந்த வித்தியாசம். இவர் தன் தாய் நாடான பிரித்தானியாவின் உயர் தகைமைகொண்ட இருபது தடகள வீரர்களில் இருந்து எட்டுப் பேரைத் தெரிவு செய்து தென் ஆபிரிக்காவுக்கு, - தான் தங்கம் பெறக் காரணமாக அமைந்த பயிற்சி நிலையத்துக்கு - அழைத்துச் செல்லப் போகிறார். தயாராகுதல், அர்ப்பணிப்பு, உழைப்பு என்பது என்ன என்பது இந்த மங்கையருக்குத் தெரிய வேண்டு மல்லவா என்கிறார் இவர் .



கெலி ஹோம்ஸ் பொண்ணுக்குத் தங்க மனசு

அழைத்துச் செல்லப்படும் மங்கையர் ஒரு மாதம் முழுநேர தடகளப் பயிற்சிகளிலேயே ஈடுபடுத்தப்படுவார்கள். வேறெந்த கவனக் கலைப்பான்களும் இவர்களை நெருங்க கெலி ஹோம்ஸ் விடப் போவதில்லை என்பது உறுதியாகிவிட்டது.

என்னைக் கண்டு இவர்கள் ஆச்சரியமோ, அச்சமோ அடையமாட்டார்கள் என்றே நம்புகின்றேன். ஒரு தடகள வீராங்கனையாக என்னை இவர்கள் அறிவார்கள். இரண்டு தங்கம் வென்ற என்னையும் அறிவார்கள். அது இவர்களின் உந்து சக்திக்கு உதவியாக இருக்கும் என்கிறார் இவர்.

இளசுகளை வளர்த்தெடுக்க அந்தந்த நாட்டின் வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப எவ்வளவோ செய்ய முடியும் மனம் இருந்தால், யாருக்கப்பா மனதைப் பற்றிக் கவலை என்று, எத்தனை இளசுகள் மனதுக்குள் விம்மிக் கொண்டிருக்கின்றனர் எங்கள் பிரதேசங்களில்.

— ஜோசப் கிருஷ்ணா.

# இலக்கணம் மாறுதோ இலக்கியம் ஆனதோ



கில் கிறிஸ்ட் நாளைய நாயகன்

என்ன தான் ஒருநாள் சர்வதேச கிரிக் கெட் போட்டிகள் கவர்ச்சி கரமானதா இருந்தாலும் டெஸ்ட்போட்டிகளுக்கு உள்ளமவுசுதான் முதன் மையானது. அதற்கான காரணங்கள் எல்லோரும் அறிந்ததே. ஆனால் ஒரு நாள் ஆட்டங்கள் டெஸ்ட் ஆட்டத்தின் சிறப்பைக் கெடுத்துவிடும் என்று காலம் காலமாகக் கூறிவந்த வசை மொழியொன்றை, டெஸ்ட்டுக்குள் ஒரு நாள் பாணியைப் புகுத்தி டெஸ்ட் ஆட் டங்களை மெரு கேறச் செய்துவிட்டார்கள் ஒரு சில சர்வதேச கிரிக்கெட் வீரர்கள்.

நின்று நிதானித்து, விளையாடுவதைவிட்டு சந்தர்ப்பம் பார்த்து அடித்து சிறுகச் சிறுகச் சேர்த்து, இப்படியாக வெல்லாம் டெஸ்ட் போட்டிகளில் ஓட்டங்கள் சேகரிக்க ஒரு இலக்கணம் இருக்க அதையெல்லாம் மீறி, அதிரடியாகக்கூட டெஸ்ட் ஆடலாம் என்று நிரூபிக்கிறார்கள் சிலர். இவர்கள் எந்தப்பந்தையும் மன்னிப்பதில்லை. துஷ்டனைத் தூர விலக்குவது போல நாலென்றும் ஆறென்றும் சாத்துசாத்தென்று சாத்திவிடுவார்கள். இப்பொழுது முதன் முதலாக டெஸ்ட்டில் அதிவிரைவாக ஓட்டம் குவிப்பவர்கள் பற்றிய ஆய்வொன்று நடைபெற்றுள்ளது. இந்த வகையில் அதிவேக ஓட்டங்கள் சேர்க்கும் வீரர் அடம் கில்கிறிஸ்ட், முதலிடம் வகிக்கிறார். ஒரு தரவின் படி 100 பந்துகளுக்கு 81.9 ஓட்டம் எடுக்கும் திறமை இவரிடம் காணப்படுகிறது. கில்கிறிஸ்ட், விவியன் றிச்சட்ஸ் ஆகியோர் பலமான அணிகளில் இருப்பதால் இது சாத்தியம் என்றாலும், ஏனைய அணி பந்துவீச்சாளர்கள் அவ்வளவு இலகுவானவர்கள் அல்லவே. 1877 முதல் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளை ஆய்வுக்கு எடுத்த ஆய்வாளர் 1000 ஓட்டங்களுக்கு மேல் பெற்றவர் களையே தன் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். அவர் தெரிவு செய்துள்ள 100 வீரர்களில் தற்போதுகளத்தில் உள்ளவர்கள் முப்பது பேர் மட்டுமே. இதில் முதல் பத்துப் பேருக்குள் வருபவர்கள் கில்கிறிஸ்ட், ஷேவாக், பிளின்டொப், சனத் ஜெயசூரிய ஆகியோர்.



பிளின் ரொப் புதிய வரலாறு

இவர்களுக்கு அப்பால் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ரிக்காடோ பவல், நியூஸி லாந்து அணியின் பிரெண்டன் மக்கலம், ஆகியோரும் பந்துவீச்சாளர்களை நிலை குலையச் செய்பவர்களே. இவர்களின் இடங்கள் எதிர்காலத்தில் நிர்ணயிக் கப்படக்கூடும். பொதுவாக கிரிக்கெட் ரசிகர்கள் அதிவேக வீரர்கள் பற்றி மனங் கொண்டிருந்தா லும் இத்தகைய ஒரு ஆய்வு நடைபெற்றிருக்கும் என்று எதிர் பார்த்திருக்கமாட்டார்கள். ஆனால் புழமை வாதிகள் எதை ஏற்க மறுத்தார்களோ அதனைப் புதுயுகம் ஏற்றுக்கொள்கிறது. இல்லாவிட்டால் சனத் ஜெயசூரிய சிறப்பாக ஏழாவது துடுப்பாட்ட வீரராக வந்து ஓட்டம் குவிக்கும், கில்கிறிஸ்ட் போன்ற வர்களுக்கு அணித் தலைமையை அளிக்கும் அளவிற்கு நிலைமை இருந்திருக்குமா?

— சர்மிளா.

# கடல் அக்கரை போனோரே



மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் கஸ்லோகி அந்த அணி பெற்ற மோசமான டெஸ்ட் தொடர் தோல்விகளால் மாற்றப்பட்டார்– அல்லது அவராகவே பதவி விலகினார். இந்த நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு அந்த அணியின் வரலாற்றிலேயே முதன் முதலாக வெளிநாட்டுப் பயிற்சியாளர் ஒருவர் நியமிக்கப்பட் டுள்ளார். இவ்வாறு நியமிக்கப்பட்டவர் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பெனட் கிங்.

அத்துடன் இவருக்குத் துணையாக இவரது நாட்டிலிருந்தே டேவிட் மோரே என்பவரும் நியமிக் கப்பட்டுள்ளார். இதில் பெனட் கிங்கைப் பற்றி அதிகம் தெரியாவிட்டாலும், டேவிட் மோரே பயிற்சி அளிப்பதில் மிகுந்த அனுபவம் வாய்ந்தவர் எனவும், எனவே மேற்கிந்தியத் தீவுகளின் முன்னேற்றத்திற்கு மிகவும் உறுதுணையாக இருப்பாரெனவும் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட்சபை தெரிவித்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு காலத்தில் கிரிக்கெட் ஜாம்பவான்களாக இருந்த நேரம், எந்தவொரு வெளிநாட்டுப் பயிற்சியாளரும் அந்த அணிக்கு எந்தவித பயிற்சிகளையும் வழங்கவில்லை என்பதனை நாம் இங்கே கவனிக்க வேண்டும். இந்த நிலையில் அந்த அணி தற்போது மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திவரும் நிலையிலேயே வெளி நாட்டுப் பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது மேற்கிந்தியத் தீவுகள் மற்றைய நாடுகளைப் பின்பற்றி தமது அணியை வளர்த்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தென்பதனையே காட்டுகின்றது. உதாரணமாக, இந்திய அணிக்கு கபில்தேவ் நியமிக்கப்பட்ட போதும் அவரால் பயிற்சி வழங்கலைச் சிறப்பாகச் செய்யமுடியாத காரணத் தாலேயே நியூஸிலாந்தின் ஜோன் ரைட் நியமிக்கப்பட்டார். அதுபோலவே பாகிஸ்தானில் ஜாவிட் மியாண்டட்டால் செய்யமுடியாததை தற்போது தென்னாபிரிக்கா வின் பொப்வூல்மர் செய்கின்றார். இலங்கையிலும் துலிப் மெண்டிஸ் சாதிக்காத காரணத்தாலேயே வட்மோர், பின்னர் தற்போது ஜோன்டைசன் ஆகியோர் செய்து வருகின்றனர். இதில் மிகப் பெரிய பரிதாபம் என்ன வெனில், சிம்பாப்வேயிலிருந்து முன்னணி வீரர்கள் அனைவரும் வெளியேறிய நிலையில், அந்த அணி மிகவும் பலவீனமடைந்து உள்ள நிலையில், சிம்பாப்வேயின் முன்னாள் வீரர் டங்கன் பிளெட்சர் இங்கிலாந்து அணிக்குப் பயிற்சி வழங்கி அந்த அணியை உயர்நிலைக்குக் கொண்டுவந்ததுதான் . ஆனாலும் இதிலும் அவுஸ்ரேலிய, தென்னாபிரிக்க மற்றும் நியூஸிலாந்து அணிகள் வேறுபட்டன. அவைகள் தமது நாட்டுப் பயிற்சியாளர்களையே, பயிற்சியில் ஈடுபடுத்தியுள்ளனர்.



பெனட் கிங் மன்னவன் வந்தானடி

எனவே தற்போது முதன்முறையாக வெளிநாட்டுப் பயிற்சியாளர் நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில், லாறா தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி, புதிய உத்வேகம் பெறுமா? இதற்கு அடுத்து வரும் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் விடைபகரும்.

—யசோ

விளையாட்டு அரங்கம்

# வவுனியா வடக்கு ஆசிரியர்களுக்கான நாடகமும் அரங்கியலும் பயிற்சிப் பட்டறை

(வவுனியா)

வவுனியா வடக்கு ஆசிரியர்களுக்கான நாடகமும், அரங்கியலும் பயிற்சிப்பட்டறை கடந்த 5 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை இடம்பெற்றது.

கிளிநொச்சி அழகியல் கலா மன்ற சுப்பையா நினைவு மண்டபத்தில், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு வவுனியா வடக்கு ஆசிரியை ஜெ. கௌரிமனோகரி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வன்னி மாவட்ட கல்விக் கழக பொறுப்பாளர் ஞானம், போரூட் பிரதிநிதி அனி, அழகியல் கலா மன்ற அதிபர் விஜயசேகரம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் சிறப்புரை நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில் யுத்த மேகம் சூழ்ந்திருந்த காலப் பகுதியில் தமிழரின் விடுதலையை எடுத்தியம்பும் கருத்துக்களை கிராமம் கிராமமாக வீதி நாடகத்தினூடு கொண்டு சென்றவர்கள் இந்த ஆசிரியர்கள். தமிழரின் சமூக விழுமியங்களை எதிரியினுடைய ஆக்கிரமிப்பு வேளைகளிலும், மக்களின் இடம்பெயர்வு வேளைகளிலும், சொல்லொணாத் துன்ப துயரங்களிலும் மாணவர்களுக்கு புகட்டியவர்கள் இவர்கள். இவர்களின் இந்த உழைப்பு வீண்போகாது. தொடர்ந்தும் இவர்கள் உழைப்பார்கள் என்பதில் எதுவித ஐயமுமில்லை என மேலும் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சான்றிதழ்களை வன்னி கல்விக்கழகப் பொறுப்பாளர் ஞானம், கிளிநொச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன், ஆங்கில ஆசிரிய ஆலோசகர் கணேஸ், போரூட் நிறுவனப் பிரதிநிதி அனி, கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ஈழப்பிரியன், கிளிநொச்சி மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கி கௌரவித்தனர்.




# வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் விடுதி அமைத்து தரக் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் கடமை புரியும் பெண் ஆசிரியர்கள் தங்குவதற்கு பொருத்தமான இடங்களில் விடுதிகளை அமைத்துத் தருமாறு அந்தப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள், வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களில் பெரும்பாலோனோர் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் தங்கி நின்றே கடமை புரியவேண்டியுள்ளது.

போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேசத்தில் ஆசிரியாகள் தங்கி நிற்பதற்குப் பொருத்தமான வீட்டு வசதிகளும் இல்லை. உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில் போன்ற பாடசாலைகளில் அதிகளவு பெண் ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர். இவர்கள் தங்கி நிற்பதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

எனவே, விடுதி வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (122)

# மழை காரணமாக முன்பள்ளிகளில் கற்பித்தல் செயற்பாடுகள் பாதிப்பு!

வடமராட்சி கிழக்கில் உள்ள கிராமங்களில் ஓலைக் கொட்டகைகளில் இயங்கும் சகல முன்பள்ளிகளும் கடந்த பல நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளன.

இந்த முன்பள்ளிகளில் ஆசிரியர், மாணவர்களுக்கான தளபாடங்கள் எதுவும் இல்லாத நிலையில், பாயிலும், மண் தரையிலும் இருந்தே கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நிலத்தடி நீரூற்றால் நிலம் ஈரமாயுள்ளது.

இதன் காரணமாக முன்பள்ளிகளின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. (21)

# தற்போது பெய்துவரும் மழையினால் மன்னார் கிராம மக்கள் பெரும்பாதிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக சாந்தபுரம், சாவற்காடு, பள்ளிமுனை, ஈவிலிந்த நகர், மூர் வீதி ஆகிய கிராம மக்கள் பாரிய பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு சோஆ நிறுவனம் தரை விரிப்புக்களையும், மாவட்ட துயர் துடைப்புச்சங்கம் உலர் உணவுப் பொருட்களையும் வழங்கி வருகின்றன.

# உருத்திரபுரம் வாய்க்கால் மறுசீரமைப்பு பணியில் ஈடுபட்ட மக்களுக்கு உலர் உணவு வழங்கவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - உருத்திரபுரம் விவசாய அமைப்புக்களின் ஒழுங்குபடுத்தலில், கடந்த மாதம் நீர் விநியோக வாய்க்கால் மறுசீரமைப்புப்பணிகளில் ஈடுபட்ட மக்களுக்கு இதுவரை உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படவில்லை.

இந்தப் பணியில், அன்றாடம் கூலிவேலை செய்து வாழ்க்கையை நடத்தும் மக்களே ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களுக்கான உலர் உணவு பொருட்கள் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

எனினும், இந்தப்பொருட்கள் வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் பெரும் துன்பம் அடைந்துள்ளதாக உருத்திபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

வாய்க்கால் துப்பரவு பணிகளில் ஈடுபட்ட மக்களுக்குரிய கூலிப் பணத்தின் பெறுமதி 1 இலட்சத்து 27 ஆயிரத்து 470 ரூபா ஆகும். இந்தப் பணிகள் முடிவடைந்து 6 மாதமாகியும் தமக்குரிய கூலியோ, உலர் உணவுப் பொருட்களோ வழங்கப்படவில்லை என இந்த மக்கள் மாவட்ட அரச அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.







வவுனியா நகரசபை மண்டபத்தில் பி.ரவிவர்மனின் 'நெடுங்காலத்தின் பின்னொரு நாள்' சிறுகதை வெளியீட்டு விழா நிகழ்வில் முதற் பிரதியை வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ரி.ஞானவேல் வெளியீட்டு வைக்க, அகில இலங்கை தமிழ் காங்கிரசின் வன்னி கிளைத் தலைவர் கே.ஏ.செந்தில்நாதன் பெற்று கொள்வதை முதலாவது படத்திலும், இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவிகளின் வரவேற்பு நடனத்தை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். படம்: கனகரவி.

# பருத்தித்துறை - மருதங்கேணி பஸ்சேவை கட்டணம் இரண்டு மடங்காக அதிகரிப்பு

பருத்தித்துறை - மருதங்கேணி பஸ் சேவைக்கட்டணம் கடந்த வாரம் முதல் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பருத்தித்துறையிலிருந்து முகமாலையினூடாக மருதங்கேணி செல்வதற்கு ஒரு வழிக்கட்டணமாக 25 ரூபா அறவிடப்பட்டு வந்தது. கடந்த வாரம் முதல் இந்தக்கட்டணம் 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து மருதங்கேணிப் பிரதேசத்திற்கு கடமை புரியச் செல்லும் அரச ஊழியர்கள் பாதிப்பு அடைந்துள்ளனர்.

அரச ஊழியர்களுக்கு இதனால் ஏற்படும் பாதிப்பை ஈடுசெய்வதற்காக பருவகாலச் சீட்டுக்கள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திங்கள் சென்று வெள்ளி திரும்பும் அரச ஊழியர்கள் இதனால் பாதிப்பு அடைவார்கள்.

மேலும் அரச ஊழியர்களும், ஆசிரியர்களினதும் வேண்டுகோளுக்கு இணங்கவே சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் இந்தச் சேவை நடைபெற்று வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (122)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடுகு விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தொண்டமான் நகர்ப பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்களுக்கு கிடுகுகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராம சேவகர் அலுவலகத்தில் வைத்து அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தால் கிடுகுகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பகுதியில் வெள்ளத்தால் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உப பணிமனை திறப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அங்கத்துவ சங்கங்களில் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திலுள்ள நாகர்கோயில் கிழக்கு, நாகர் கோயில் மேற்கு, பொற்பதி, குடத்தனை, மணற்காடு ஆகிய சமாச சங்களினதும் அங்கத்தவர்களினதும் நலன்கருதி சமாசத்தின் உபபணிமனை பொற்பதிக் கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த விழாவில் கடற்தொழில், கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள், சமாசப் பிரதிநிதிகள், அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (21)

# மன்னார் - அடம்பன் பிரதேசத்தில் முன்பள்ளி ஆசிரியருக்கான கருத்தமர்வு

(மன்னார்)

மன்னார் - அடம்பனில் சிறுவர் பாதுகாப்பு நிதியமும், தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் இணைந்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கான 16 நாள் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தினர்.

அடம்பன் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இந்தக் கருத்தரங்கு காத்தான்குளம் மாதிரி முன்பள்ளியில் கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் இந்த மாதம் 9 ஆம் திகதி வரை இடம்பெற்றது.

மடுக் கல்வி வலய முன்பள்ளி இணைப்பாளர் அ.கில்டா தலைமையில் இடம்பெற்றது. இந்தப் பயிற்சிப்பட்டறையில் முன்பள்ளிக் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு, குழந்தைகளின் உளவியல் முன்பள்ளி ஆசிரியர்களின் பொறுப்புக்கள், கடமைகள், சுகாதாரமும், போசாக்கும் போன்ற விடயங்கள் தொடர்பாக முறைசார் ஆலோசகர் களால் விளக்கம் அளிக்கப்பட்டன. இதில் 30இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# பாரதிபுரம் மகாவித்தியாலயத்தில் முறைசாராக் கல்விக் கண்காட்சி

முல்லைத்தீவு - பாரதிபுரம் மகா வித்தியாலயத்தில் முறைசாராக் கல்வியினரின் கண்காட்சி நிகழ்வு இடம்பெற்றது.

வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் பாடசாலை அதிபர் சுப்பிரமணியேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டதை தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை விஸ்வமடுப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் திலகன் ஏற்றிவைத்தார்.

முறைசாராக் கல்வி மாணவர்களின் தொழில்சார் பயிற்சி நெறிக் கண்காட்சி மண்டபத்தை முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வராஜா திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்*
*தீராமை ஆர்க்கும் கயிறு.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## பருவத்தே பயிர் செய்

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி ஆகிய பிரதேசங்களில் பதின்னான்கு பாலங்களைப் புனரமைக்கும் பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டன. கொங்றீட் பாலமாக இருந்த இந்தப் பாலங்கள் சேதமடைந்திருப்பதால் – உருக்குப் பாலங்களாக மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பாலப் புனரமைப்புப் பணிகள் கடந்த செப்ரெம்பர் மாதத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. அந்தப் பணிகளுடன் கூடவே – பருவமழையும் ஆரம்பித்து விட்டது. இப்போது புனரமைப்புப் பணிகளை கொஞ்சமேனும் முன்னெடுக்க முடியாத அளவுக்கு பருவ மழையும் கொட்டித் தீர்த்து வருகிறது.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை நாவற்குழி, கைதடி, வல்லை போன்ற பாலங்கள் புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்ட சில நாட்களிலேயே பணிகள் யாவும் தடைப்பட்ட நிலையில் இருக்கின்றன.

பாலம் புனரமைக்கும் வரை பொதுமக்கள் பயன்படுத்துவதற்கென போடப்பட்ட தற்காலிக மண் பாதைகள் கூட மழையால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சில சமயங்களில் இந் துப் பாலங்களை வெள்ளம் மூடிவிடும் அளவுக்கு ஆபத்தானதாக இருப்பதுடன் வாகனங்கள் புதைந்துவிடும் ஆபத்துக்களும் காணப்படுகின்றன.

ஏற்கனவே தொடர் மழையால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு, ஏ 9 வீதியில் அமைந்திருக்கும் நாவற்குழி மற்றும் கைதடிப் பாலங்களினூடாகப் பயணம் செய்வது பெரும் சிரமத்தை ஏற்படுத்திவருகிறது.

இதைவிட வல்லைப்பாலத்தில் புனரமைப்பு ஆர்ம்பிக்கப்பட்டாலும் அதே பழைய பாலம் ஊடாகத்தான் பயணங்கள் தொடர்கின்றன. ஆனால், இதையிட்டு யாரும் நிம்மதி கொள்ள முடியாது.

ஏனென்றால், வல்லைப் பாலம் சேதமடைந்திருந்த காலத்தில் உரியவர்கள் பராமரிக்காததன் விளைவாக அடிக்கடி இடிந்து வீழ்ந்து வருகிறது. அண்மையில் கூட பாலத்தின் மதகின் பெரும் பகுதி இடிந்து வீழ்ந்து, போக்குவரத்து பல மணிநேரம் தடைப்பட்டது.

எங்கிருந்தோ மண் எடுத்து வந்து கொட்டி, நிரப்பி தற்காலிகமாகப் போக்குவரத்து சரி செய்யப்பட்டிருந்தாலும், விடாது கொட்டித்தீர்க்கும் மழையால் மீளவும், அது எப்போது இடிந்து விழுமோ என்ற அச்சம் இருக்கவே செய்கிறது.

செப்ரெம்பர் மாதத்தில் பாலம் புனரமைப்புப் பணிகளைத் தொடங்கினால் இத்தகைய இயற்கையின் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்பது அரசாங்கத்துக்கோ, அதிகாரிகளுக்கோ தெரியாத விடயமல்ல.

ஆனாலும் பாலம் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டு இடைநடுவில் நிற்கின்றன. இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையிட்டு எவரும் கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

பாலங்களின் புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்ட போது – யாழ்ப்பாணத்துக்கு வந்து அவற்றைப் பார்வையிட்ட ஜனாதிபதியின் பேச்சாளரும், வடக்கு- கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் பணிப்பாளருமான ஹரீம் பீரிசிடம் இது பற்றி வினாவப்பட்டது.

அதற்குப் பருவமழை பெய்தாலும் புனரமைப்புத் தொடரும், கடும் மழை என்றால் பணிகள் தடைப்படுவது தவிர்க்க முடியாது. அப்படியானால் நமது கட்சியை சில மாதங்களுக்கு முன்னே ஆட்சியில் மக்கள் அமர்த்தியிருக்க வேண்டும் எனக் கூறியிருந்தார்.

அப்படியானால் மக்கள் படும் இன்னல்களை அவதானித்துப் பார்த்தால், ஏன் இந்த அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்தினார்கள் என்று மக்கள் அங்கலாய்க்கும் நிலை ஏற்படுள்ள-------து.

மக்களின் அடிப்படை வசதிகளான இத்தகைய பாலங்களைப் புனரமைப்புச் செய்வதில் அரசாங்கம் அவசரம் காட்ட வேண்டும் தான் – ஆனால் அரசாங்கத்தின் – தாமதத்தின் பின் காட்டப்பட்ட அவசரத்தினால் பொதுமக்கள் பாடு திண்டாட்டமாகியுள்ளது.

வன்னியிலும் கூட புதிய பாலங்களை அமைக்க - தற்காலிகமாகப் போடப்பட்ட மாற்றுப் பாதைகளை மேவி வெள்ளம் பாய்ந்து பல இடங்களிலும் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.


பருவமறிந்தே பயிர் செய்ய வேண்டும் என்பது போலவே பருவமறிந்தே இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் அதிகாரி கள் கவனம் செலுத்த வேண்டும்.

இது போன்றே இந்த வருடத்துக்குள் செய்து முடிக்கப்பட வேண்டிய பல்வேறு கட்டுமானப் பணிகள் இதுவரை இழுபறிப்பட்ட நிலையில் இப்போது அவசர அவசரமாக மேற்கொள்ளப்படுகின்றது.

இப்படிக் குறுகிய அவகாசத் துக்குள் மேற்கொள்ளப்படும் வேலைகள் தரமுயர்ந்தவையாகவும் இருக்கப் போவதில்லை.

இது அதிகாரிகளும், அரசாங்கமும் கணக்குக் காட்டுவதற்காக மேற்கொள்கின்ற பணியாக இருக்குமே அன்றி – மக்களுக்கான நன்மையை ஏற்படுத்தும் நோக்கங்கள் கொண்டவையாக இருக்காது.

# நாடும் நடப்பும்




## தேசிய தேசப்பற்றாளர் இயக்கம்

# பாரிஸ், லண்டன் நகரங்களில் புதிய அலுவலகங்கள் திறப்பு

தேசிய தேசப்பற்றாளர் இயக்கத்தின் இரு கிளைகள் - பாரிஸ் மற்றும் லண்டன் ஆகிய நகரங்களில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன.

இந்த இரு நகரங்களிலும் தேசிய தேசப்பற்றாளர் அமைப்பின் கிளைகள் அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்காக, இந்த அமைப்பின் இணைத் தலைவர்களான வண.எல்லேகுணவன்ச, மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஆகியோர் நேற்று முன்தினம் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

தேசிய தேசப் பற்றாளர் அமைப்பின் பாரிஸ் நகரக் கிளை - நேற்று பாரிஸ் நகரிலுள்ள அரேகா மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதேசமயம் இந்த அமைப்பின் லண்டன் நகரக்கிளை- இது லண்டனில் உள்ள அரோனா மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

இந்த இரு இடங்களில் இடம் பெற உள்ள அங்குரார்பண நிகழ்வுகளில் - எல்லேகுணவன்ஸதேரோ, விமல் வீரவன்ச ஆகியோர் சிறப்புரைகளாற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மட்டுவில் பகுதியில்

# குன்றும் குழியுமாகவுள்ள வீதிகளை ரவிராஜ் எம்.பி. பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கும், முசுறிப் பகுதிக்கும் இடைப்பட்ட வீதியின் அவல நிலையை நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பார்வை யிட்டார்.

நீண்டகாலமாகத் திருத்தப்படாது, பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படும் இந்த வீதியின் நிலைபற்றி அறிவித்து, இதனைப் புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதிப் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்தபோதும் - அவை பயனற்றுப் போனநிலையில், இந்தப் பகுதிமக்கள் அண்மையில் மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்ற கலைநிகழ்வு ஒன்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜை - மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், அம்பாள் சனசமூக நிலையம், கண்ணகை சனசமூக நிலையம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அழைத்துச் சென்று, நேரில் காண்பித்து விளக்கினர்.

நீர் நிறைந்து, குன்றுங் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதியின் நிலையைப் பார்த்த அவர் - இந்தப் பகுதி மக்களின் போக்குவரத்துக் கஷ்டம் தனக்கு மிக வேதனையளிப்பதாகவும், அதைத் திருத்துவதற்குத் தன்னாலான சகல முயற்சிகளையும் விரைவில் எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

மேலும் 775 ஆம் இலக்க பஸ்சேவையை மீள ஆரம்பிப்பதற்கும் தான் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

கைதடிப் பாலம் திருத்தப்பட்டு வருவதால், கனரக வாகனங்கள் அனைத்தும் கனகன்புளியடி - புத்தூர் வீதியைப் பயன்படுத்துகின்றன. ஆனால், வண்ணாத்திப் பாலம் சரியில்லை எனக் காரணங்காட்டி, இந்தப் பகுதியூடாக பஸ்சேவை நடத்தாமலிருப்பதை இனியும் அனுமதிக்க முடியாது எனவும், வெகு விரைவில் பஸ்சேவை ஆரம்பிக்க் தான் ஒழுங்கு செய்வதாகவும் தெரிவித்தார். (24)

# சட்டவிரோதமாக மண் ஏற்றிய ஆறு பேருக்கு அபராதம் !

சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரம் இல்லாது, உழவு இயந்திரத்தில் மண் ஏற்றிச் சென்ற ஆறு பேரையும் - தலா 4000 ரூபா தண்டமும், 2000 தர்மப்பணத்தையும் செலுத்துமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டது.

அரியாலை மற்றும் இருபாலையைச் சேர்ந்த ஆறுபேர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர் செய்தவேளை, தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கு அமைய - அவர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகவும், 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமாகச் செலுத்துமாறும், தர்மப் பணத்தை இருபாலை கானான் சிறுவர் இல்லத்துக்குச் செலுத்துமாறும், உழவு இயந்திரங்களை - கைது செய்யப்பட்ட பொலிஸ் பிரிவில் வைத்திருக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தக் கோரி தீர்மானம்

பெரும்போகப் பயிர்ச்செய்கைகளைப் பாதிக்காத வகையில், கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஊர்காவற்துறை பிரதேச விவசாய சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

கடந்தவாரம் ஊர்காவற்துறை பிரதேச விவசாய சம்மேளனக் கூட்டம் - ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கிராமிய விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளும், விவசாயிகளும் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானமாக- இந்தமாதம் 15 ஆம் தகதி தொடக்கம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரை, கட்டாக்காலி கால்நடைகளை வெளியில நடமாட விடாது, கட்டி வளர்க்கவேண்டும் என்று உரிமையாளர்களைக் கேட்டுக்கொள்வதென முடிவு செய்யப்பட்டது. அத்துடன் கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துவ தற்குப் பிடியாட்களைப் பெரும்போக உத்தியோகஸ்தர் நியமனம் செய்து, அவர்களின் விபரங்கள் உதவி அரசாங்க அதிபர் பண மனைக்கு ஒப்படைக்க வேண்டும். கட்டாக்காலிகளைப் பிடித்துப் பராமரிக்கும் செலவை - விவசாய சம்மேளனம் பொறுப்பேற்க வேண்டும் என்றும், கட்டாக்காலிகளை ஏலத்தில் விற்கும்போது விவசாய சம்மேளனம் ஒத்துழைக்கவேண்டும். இதுதொடர்பாக, சகல கால்நடை பராமரிப்பாளர்களுக்கும் அறிவிக்கவேண்டும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்துடன், பிரதேசத்தில் நடைபெறும் நெற்செய்கைப் பரப்பளவைக் கிராமிய விவசாய சம்மேளனங்கள் ஊடாகப் பிரதேச விவசாய சம்மேளனத்துக்கு ஒப் படைக்கவேண்டும் என்றும், தீர்மானிக்கப்பட்டது.


இந்தக் கூட்டத்தில் ஊர்காவற்துறைப் பிரதேசத்துக்கென கமநல அபிவிருத்தி நிலையம் இல்லை என்றும், இந்த நிலையம இங்கு திறப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் என்றும விடுக்கப்பட்ட கோரிக்கை - அனை வராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது (51)

அரசியல் கட்டுரை

எஸ்.எம்.ஜி

# சமாதான முயற்சியும் சந்திரிகாவின் ஏமாற்றும்

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமோ, ஜனநாயக ரீதியில் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் ஆணைப்படியோ



சிங்களதேசம் தீர்வு காணப்போவதில்லை.

பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று சொல்லிக் காலத்தைக் கடத்துவதும் இதனிடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் என்றும் பாதுகாப்பு வலைப்பின்னல் என்றும் அந்நிய நாடுகளின் உதவியைப் பெற்றுத் தமிழ் இனத்தை அடக்கி ஒடுக்குவதற்குமான நடவடிக்கைகளையே சிங்கள ஆதிக்க சக்திகள் மேற்கொண்டு வருகின்றனர்.

சிங்கள அரசியல்வாதிகளுக்கிடையில் அதிகாரப் போட்டிகள், ஆதிக்கப் போட்டிகள் எனப் பல வேறுபாடுகள் நிலவிய போதிலும், தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுதந்திரமாக, சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கு இடமளிகககூடாதென்பதில் அவர்களுக்குள் வேறுபாடுகள் இல்லை. தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கக்கூடாது என்பதில் சிங்கள ஆதிக்க சக்திகளும், பேரினவாதிகளும்சரி மிக ஒற்றுமையாகச் செயற்படுகின்றார்கள்.

ஆனால், தமிழர்கள், தமிழ்த் தலைவர்கள் என்று தம்மைத்தாமே சொல்லிக்கொள்கின்றவர்கள், தாங்களே தமிழர்களுக்கு நல்ல வழிகாட்டப்போவதாகப் பறையடிப்பவர்கள் தமிழீழ விடுதலை நெருங்கி வரும் சமயத்தில் சிங்களப் பேரினவாதத்துக்குத் துணைபோகத் தமிழ் ஈழம் மலரும் நாட்களைத் தள்ளிக் கொண்டிருக்கின்றனர்.

தமிழீழத்தின் முக்கால் பாகம் இன்று விடுதலைபெற்று - கொலை, கொள்ளை எதுவுமில்லாமல் மக்கள் சுதந்திரமாகவும், சந்தோஷமாகவும், அமைதியாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

தமிழீழ மக்களின் ஒற்றுமையையும், முன்னேற்றத்தையும் கண்டு பொறாமைகொள்ளும் சிங்கள தேசம் தமிழீழ மக்களுக்குள் குழுறல்களையும், மோதல்களையும் ஏற்படுத்திச் சீர்குலைப்பதற்காகத் தமிழ் மக்களையும், அவர்களில் ஒரு பகுதியினரான இஸ்லாமிய மக்களையும் சீண்டிவிட்டுப் பார்த்தது. இவை பெரியளவில் வெற்றிபெற முடியாமல் போனதும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குள்ளிருந்து ஒரு கோடரிக்காம்பைத் தேடிப்பிடித்து வளர்த்தது.

இன்றும் கருணா என்ற அந்தக் கோடரிக்காம்பின் பெயரால் கிழக்கில் கொலைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

கிழக்கில் படைகள் நிலைகொண்டிருப்பதுடன், மேலும் அவை பலப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனாலும், கிழக்கில் கொலைகள் தொடர்ந்தவண்ணமிருக்கின்றன. இங்கு கொலைகளை நிறுத்த முடியாதவாறு படைகள் இனியும் அங்கு தொடர்ந்திருக்க வேண்டிய அவசியமென்ன? கிழக்கிலிருந்து படைகளும், அவற்றின் புலனாய்வுப் பிரிவினரும் வெளியேற்றப்பட்டாலே அங்கு கொலைகள் நின்றுவிடும்.

கிழக்கில் எவர் கொலை செய்யப்பட்டாலும், எவர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டாலும் உடனடியாகவே அரச ஊடகங்களும், பேரினவாத ஊடகங்களும் விடுதலைப் புலிகள் மீதே பழிபோட்டு உலகெங்கும் பிரசாரம் செய்து விடுகின்றனர். விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாக மீண்டும் உலக நாடுகளில் பிரசாரம் செய்வதில் அரசும், அரச ஊடகங்களும், பேரினவாத ஊடகங்களும் மட்டுமல்ல, தமிழரென்று நாமமது கொண்டிருக்கும் புல்லுருவிகளும் படாதபாடு படுகின்றனர்.

இதனால் பேச்சுவார்த்தை என்று உலகுக்குப் போக்குக் காட்டித்தான் காரியத்தை பார்க்கும் சந்திரிகாவுக்கே வாய்ப்புக் கிடைக்கிறது. பேச்சுவார்த்தை என்று தொடர்ந்தும் காலம் கடத்தப்படுகிறது. இது ஒன்றும் புதிதல்ல. இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்றதும் பல யோசனைகளையும், திட்



டங்களையும் முன்வைத்துக் காலத்தைக் கடத்துவதுதான் அன்றிலிருந்து இன்றுவரை கைக்கொள்ளப்படும் தந்திரம். இன்று சமாதான முயற்சியில் மூன்றாந்தரப்பு ஈடுபட்டாலும், அவர்களை மட்டுமல்ல எவரையுமே பேச்சுவார்த்தை என்று காலம் கடத்தமுடியுமென்பதை சந்திரிகாவும் நிரூபித்துவருகிறார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு முடிவுகாணும் சமாதான ஒப்பந்தத்தில், கைச்சாத்திட வேண்டிய இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இந்தியாவுடன், இலங்கையின் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட விருக்கின்றார்.

'சமாதானத்துக்காக' போர் நடத்திய சந்திரிகா அம்மையார்- வல்லரசுகளிடமிருந்து இறக்குமதி செய்து குவித்த நவீன ஆயுதங்களையும், நவீன படைச் சாதனங்களையும் மட்டுமல்ல வல்லரசுகளின் இராணுவ ஆலோசனைகளையும் தமது படையினருக்குப் பெற்றுக் கொடுத்திருந்தார். இதனால்தான் விடுதலைப் புலிகள் நான்கு மாதங்கள் தொடர்ச்சியாக ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் செய்து, சமாதானத்துக்குத் தயாராக இருந்தபோதும், சமாதானத்துக்கான தனது போரைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.

இனியும் ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் செய்துகொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்பதை உணர்ந்துகொண்டதும், விடுதலைப் புலிப் போராளிகள் திருப்பித் தாக்கினர். இதனால் நிலைகுலைந்து போன இலங்கைப் படையினர் பெரும் இழப்புக்களைச் சந்தித்துப் பின்வாங்கினர். பலர் தப்பி ஓடினர்.

என்னதான் நவீன ஆயுதங்களும் நவீன படைச் சாதனங்களையும் இரவல், இலவச ஆலோசனைகள் வழங்கப்பட்டபோதிலும், உயிரைத் தியாகம் செய்யும் உணர்வைக். கூலிக்காகப் படைகளில் சேர்ந்தவர்களுக்குச் சந்திரிகா அம்மையாரால் ஊட்டமுடியவில்லை.

படைகளில் சேர்ந்தவர்கள் பலர் தமக்கு வழங்கப்பட்ட நவீன ஆயுதங்களுடன் தமது உயிரைக் காப்பாற்றத் தப்பியோடினர். அந்த ஆயுதங்களைக் கொண்டே கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டுத் தமது வருமானத்துக்கு வழிதேடிக் கொண்டிருக்கின்றனர்.

நாட்டில் இந்த ஆயுததாரிகளால் மலிந்து போயிருக்கும் கொலை, கொள்ளைகளைத் தடுக்க முடியாமலிருக்கும் அரசும், அதற்கு ஆலவட்டம் பிடிக்கும் கும்பல்களும் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களையவேண்டும் என்று கூச்சலிடுகின்றனர்.

நவீன ஆயுதங்களையும், படைச் சாதனங்களையும் இனியும் நம்பியிருப்பதில் அர்த்தமில்லை என்பதை உணர்ந்துகொண்ட சந்திரிகா- பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினைக்குத் தீர்வுகாணச் சம்மதிப்பதாக அறிவித்தார்.

இலங்கை அரசுடன் கடந்த காலங்களில் நடந்த பேச்சுவார்த்தைகளும், ஒப்பந்தங்களும் செல்லாக்காசாகிப்போன சங்கதிகளை நினைவூட்டிய விடுதலைப் புலிகள் மூன்றாவது நாடொன்றின் மத்தியஸ்தத்துடன் அல்லது அனுசரணையுடன் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறவேண்டுமென்று கூறினர். இதைச் சந்திரிகா - ஏற்றுக் கொண்டார். அனுசரணையாளராகப் பிரான்ஸைச் சேர்ந்த ஒருவரின் பெயரைச் சந்திரிகா கூறியதைப் புலிகள் ஏற்கவில்லை. நோர்வேயைச் சந்திரிகாவும், விடுதலைப் புலிகளும் அனுசரணையாளர்களாக ஏற்றுக் கொண்டனர். பேரினவாத அமைப்புக்கள் சில நோர்வேக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பொதுத் தேர்தல் வந்தது. சந்திரிகாவின் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, நோர்வே இனித் தேவையில்லை என்று பிரசாரம் செய்தார். தேர்தல் முடிந்ததும் கதிர்காமர் ஒஸ்லோவுக்குப்போய் சமாதானம் சொன்னார்.

தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிபீடத்துக்குத் தெரிவானது. சந்திரிகா அம்மையாருக்கு இது பிடிக்கவில்லை.


(தொடரும்...)

கல்விச்சமூகம்

கோப்பாய் – சிவம்

# ஒரு கிராமத்துப் பாடசாலை உலகப்புகழ் பெறுகிறது

வடமராட்சி கொம்மந்துறை, கம்பர்மலை வித்தியாலயம் ஒரு சிறிய கிராமத்துப் பாடசாலை, படிப்



படியாக வளர்ச்சியடைந்து வருகிறது. கடந்த வருடங்களில் கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் சில மாணவர்கள் உயர்ந்த சித்திகளையும் பெற்றிருக்கின்றனர். சுற்றுமதில், மைதானம், கணினிக் கல்விக்கான வசதிகள் என்பவற்றைப் பெற்று, அண்மையில் அது பொலிவு பெற்றிருக்கிறது.

இத்தகைய உயர்வுக்குக் காரணங்கள் பல இருக்கின்றன. கல்லூரி அதிபரின் நிர்வாகத் திறமை, ஆசிரியர்களின் கடமை உணர்வு, பெற்றோரின் ஒத்துழைப்பு, பழைய மாணவர் சங்கத்தினரின் பங்களிப்பு, ஊர் மக்களின் பற்றுறுதி, இவற்றோடு சேர்ந்து இந்தச் சிறு பாடசாலையை உலகப் புகழ் பெற வைப்பதில் இந்தப் பாடசாலையின் பழைய மாணவர் சங்க ஐக்கிய ராச்சியக் கிளையினரின் செயற்பாடும் முக்கியமானதாகிறது.

2000 ஆம் ஆண்டு முதல் இந்தக் கிளையினர் லண்டனில் ஆண்டு தோறும் “பூபாளராகங்கள்” என்ற கலை நிகழ்ச்சியை நடத்தி வருகின்றனர். “பூபாளராகங்கள்” என்ற பெயரில் மலர் ஒன்றையும் வெளியிட்டு வருகின்றனர். ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் புகழ்ந்து பேசப்படுகின்ற ஒரு பெருவிழாவாக கோடை பிறந்ததும், யாவரும் எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு சிறப்பு நிகழ்வாக ‘பூபாளராகங்கள்’ அமைந்து விடுகிறது.

ஐரோப்பாவின் புகழ்பெற்ற தொலைக்காட்சி நிறுவனமான “தீபம” உலகப்புகழ் பெற்ற “உலகத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (IBC), ஐரோப்பியத் தமிழர்களிடையே பிரபலமாக விளங்கும் “புதினம்” பத்திரிகை என்பவற்றோடு ஈழத்தின் தமிழ்த் தேசியத் தினசரிகள் ஆகிய ஊடகங்கள் யாவும் இந்த நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து அனுசரனை வழங்குகின்றன.

மண்டபம் நிறைந்த சனத்திரள், அனுமதிச் சீட்டை ஆவலுடன் வாங்கி, நிகழ்ச்சியை ஆவலுடன் பார்க்கிறது. “பூபாளராகங்கள்” மலரில் விளம்பரம் வெளியிடுவதற்கு விளம்பர நிறுவனங்கள் போட்டியிடுகின்றன. இவற்றின் மூலம் சேரும் பெரு நிதியில் - ஒரு பகுதி பாடசாலைக்கும், மறு பகுதி யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஈழத்து அநாதைச் சிறுவர்களின் நலனுக்குச் செலவிடப்படுகிறது.

இத்தனை சிறப்புக்கும் காரணம்- லண்டனில் இயங்கும் கிளையினரின் ஒற்றுமையும், ஒருமித்த செயற்பாடும் - முக்கியமாக விழா அமைபபாளரும் மலராசிரியருமாகிய மகாலிங்கம் சுதாகரனின் பெரும் முயற்சியுமாகும். 1997 ஆம் ஆண்டில் கம்பர்மலை வித்தியாலய மைதானத்தில் முதன் முதல் “பூபாளராகங்கள்” நிகழ்ச்சியைச் சிறப்பாக முன்னின்று நடத்திய சுதாகரன் - புலம்பெயர்ந்து லண்டன் சென்றதும் அங்கு இந்தக் கிளையை ஸ்தாபித்துக் கடந்த ஐந்தாண்டுகளாக நடத்திவருகிறார்.

இந்த ஆண்டு கடந்த ஓகஸ்ட் 14 ஆம் திகதி லண்டன் “கிறீன் பேட்” மண்டபத்தில் நடந்த “பூபாளராகங்கள்'' விழாவிலே ஈழத்திலிருந்து சிறப்பு விருந்தினர்களாக இருவர் அழைக்கப்பட்டிருந்தனர்.

“குற்றவாளிக் கூண்டில் தமிழ்ப் பெற்றோர்'' என்ற தலைப்பிலான வழக்காடு மன்றத்தை நடத்துவதற்கு ஈழத்து இலக்கியவாதியும், பேச்சாளருமான கோப்பாய் சிவமும், லண்டன் புகழ் துஷி.தனு குழுவினருடன் இணைந்து, இன்னிசைக் கானமழை நிகழ்ச்சியை நடத்துவதற்கு அருணா இசைக் குழுவின் தலைவர் ஈழநல்லூர் அருணா, கலந்து சிறப்பித்திருந்தார். அவுஸ்ரேலியாவிலிருந்து பொப்பிசைப் பாடகர் நித்தி கனகரத்தினமும் வந்திருந்தார். உலகப் புகழ்பெற்ற அன்பு அறிவிப்பாளர் பி.எச்.



அப்துல் ஹமீத், ஆனந்தராணி பாலேந்திரா, எஸ்.கே.ராஜன் ஆகியோருடன் இணைந்து நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சரின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சு.மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஐரோப்பாவின் முன்னணி வெள்ளிவிழா நடன ஆசிரியை ராகினி ராஜகோபாலின் “நாட்டியாலயா” நடனப் பள்ளி மாணவிகளின் நாட்டிய நிகழ்வுகளும், க.பாலேந்திராவின் தமிழ் அவைக் காற்றுக் கழகத்தின் “சம்பந்தம்” நாடகமும் இந்த ஆண்டில் சிறப்பு கலை நிகழ்வுகளாக அமைந்தன.


“தமிழ்ப் பெற்றோர்கள் தமது ஆசைகளைப் பிள்ளைகள் மீது திணிக்கிறார்கள்'' எனக் கூறிய அவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்திய வழக்காடு மன்றத்தில் நீதிபதியாக கோப்பாய் சிவம் கடமையாற்றினார். கவிஞர் க.இராஜமனோகரன், கரவை கவி.வீரவாகு, ச.ஆனந்ததியாகர், மாதவி சிவல்லன் ஆகியோர் இந்த வழக்காடு மன்றத்தில் கலந்து கொண்டனர்.

“பூபாளராகங்கள் 2004” சிறப்பு மலரை - மலராசிரியர் ம.சுதாகரன் வெளியிட்டு வைக்க, தமிழருவி த.சிவகுமாரன் மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார்.

கனமான நிகழ்ச்சிகளைக் கச்சிதமாகத் தொகுத்து வழங்கும் அமைப்பாளர்களின் திறமை பாராட்டுக்குரியது. அது மட்டுமல்லாமல் மிகவும் ஆடம்பரமாக நடக்கும் இந்த விழாவைப் பார்த்து, அதிகம் செலவு செய்கிறார்கள் எனச் சிலர் தவறாக நினைக்கிறார்கள். ஆனால், விளம்பர அனுசரணைகள் யாவும் இலவசமாகச் செய்யப்படுகின்றன என்பதும், விருந்தினர் பிரயாணச் செலவுகளைக்கூட சில நிறுவனங்கள் பொறுப்பேற்கின்றன என்பதும் வியப்படைய வைக்கும் செய்திகள். இவை விழா அமைப்பாளரின் ஆற்றலின் சிகரங்கள். ★

## இந்திய பவளவிழா கிண்ண கிரிக்கெட்

# பாகிஸ்தான் 6 விக்கெட்டுக்களால் இந்திய அணியைத் தோற்கடித்தது!



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பவள விழாவையொட்டி, நேற்று கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடந்த ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களால், இந்திய அணியைத் தோற்கடித்து, பவள விழாக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் கங்கூலி முதலில் தமது அணி துடுப்பெடுத்தாடுமெனத் தெரிவித்தார். இதன்படி சச்சினும், ஷேவாக்கும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர்.

இதில், அக்தரின் நான்காவது ஓவரிலேயே சச்சின் அடித்த பந்தை அப்துல் ரஸாக் பிடிக்கத் தவறியதால், அவர் ஆட்டமிழப்பிலிருந்து தப்பித்துக்கொண்டார்.

எனினும், இவர் 17 பந்துகளில் 2 பவுண்டரிகள் அடங்கலாக 16 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், ஒரு ஓட்டத்தைப் பெற முற்படுகை



யில், களத்தடுப்பிலிருந்த யுனிஸ் கானினால் ரன் அவுட் ஆக்கப்பட்டார்.

இதனையடுத்து, ஷேவாக்குடன் லக்ஸ்மன் இணைந்தார். இவர்கள் இருவரும் சிறப்பாக அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இதிலும், லக்ஸ்மன் தனது வழமையான தடுத்தாடும் பணியை விடுத்து அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார்.

இவர் 44 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், அப்ரிடியின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் கம்ரன் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.




இதன்பின் ஷேவாக்குடன் கங்கூலி இணைந்தார். ஆனால், ஷேவாக் 65 பந்துகளில் 2 சிக்ஸர் 6 பவுண்டரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், அப்ரிடியின் பந்தில் போல்ட் ஆனார். இதன் பின்னர் கங்கூலியுடன் ராவிட் இணைந்த போதும் இவர் சொற்ப ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தார். இவர் 34 பந்துகளில், ஒரு பவுண்டரி அடங்கலாக 16 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், அப்துல் ரசாக்கின் பந்தில் அப்ரிடியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் கங்கூலியுடன் யுவராஜ் இணைந்தார். இவர்கள் இருவரும் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களின் பந்துகளை நாலாபுறமும் அனுப்பிக்கொண்டிருந்தனர்.

இவர்களின் இணைப்பாட்டத்தால் சரிந்திருந்த இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை சடுதியாக உயர்ந்தது. இதில் கங்கூலி 70 பந்துகளில், 2 சிக்ஸர் ஒரு பவுண்டரி அடங்கலாக 48 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், அக்தரின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் யுவராஜ் சிங்குடன், கைவ் இணைந்தார். இவர்கள் கடைசி நேரம் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கையில், 50 ஆவது ஓவர் நிறைவுக்கு, முதல் பந்தில் யுவராஜ், நவீட் உல் ஹசனின் பந்தில் யுனிஸ்கானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 62 பந்துகளில் 2 சிக்ஸர் 10 பவுண்டரிகள் அடங்கலாக 78 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.



இறுதியில் கைவ் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களைப் பெற்றார். இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக் களை மட்டும் இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் 24 உதிரி ஓட்டங்களையும் விட்டுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் அப்ரிடி 2 அக்தர் மற்றும் நவீட் உல்ஹசன் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 293 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற மிகப்பெரிய இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்கள் ஆரம்பம் முதலே எவ்வித சலனமும் இன்றி, இந்திய பந்து வீச்சாளர்களின் பந்துகளுக்கு முகங்கொடுத்து ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்த வண்ணமே இருந்தனர். இதிலும் ஆரம்ப வீரர் யுனிஸ்கான் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தாலும், மற்றைய ஆரம்ப வீரர் சல்மான் பட்டுடன் சொகைப் மலிக் இணைந்து சிறந்ததொரு அடித்தளத்தையிட்டார்.

இவர் 55 பந்துகளில் 2 சிக்ஸர் 5 பவுண்டரிகள் அடங்கலாக 61 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஷேவாக்கின் பந்துவீச்சில் கைவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் சல்மான் பட்டுடன் இன்ஸமாம் இணைந்தார். இவர்கள் சிறப்பாக விளையாடிக்கொண்டிருக்கையில், சல்மான் பட், காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக ஆட்டத்தை இடைநிறுத்தி மைதானத்திலிருந்து வெளியேறினார்.

இதனையடுத்து, யுகானா வந்தார். இவர் 25 பந்துகளில் ஒரு பவுண்டரி அடங்கலாக 18 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், நெஹ்ரா வின் பந்தில் ராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் கால் உபாதை காரணமாக வெளியேறிய சல்மான் பட் மீண்டும் வந்தார். இவரும் இன்ஸமாமும் சிறப்பாக விளையாடி பாகிஸ்தான் அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றனர்.


இதில் இன்ஸமாம் 75 பந்துகளில் ஒரு சிக்ஸர் 8 பவுண்டரிகள் அடங்கலாக 75 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், நெஹ்ராவின் பந்தில் ஷேவாக்கின் சிறப்பான பிடியின் மூலம் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த ரஷாக் ஒரு ஓட்டத்தைப் பெற்றார். ஆரம்ப வீரர் சல்மான் பட் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 130 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 108 ஓட்டங்களைப் பெற்றார். இவரே நேற்றைய போட்டியின் ஆட்ட நாயகனாகத் தெரிவானார். அத்துடன் இவரது முதலாவது சதமும் இதுவாகும்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 49 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கான 293 ஐ அடைந்தது. இதில் இந்திய பந்து வீச்சாளர்கள் 30 ஓட்டங்களை உதிரிகளாக விட்டுக்கொடுத்த னர்.

பந்துவீச்சில் நெஹ்ரா 2, சகீர் கான், ஷேவாக், இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# றொனால்டோ ஜனவரியில் திருமணம் செய்ய முடிவு!



பிரேசில் கால்பந்து வீரர் றொனால்டோவுக்கு வரும் ஜனவரியில் திருமணம் நடைபெறவுள்ளது.

பிறேசில் அணியின் நட்சத்திர கால்பந்து வீரர் றொனால்டோ, இவருக்கும் பிரபல மொடலான டேனியலா ஸிகரெல்லி இருவருக்கும் வரும் ஜனவரியில் திருமணம் நடக்கவுள்ளது. இந்தத் திருமணத்தை பாரிஸில் நடத்த இருவரும் திட்டமிட்டுள்ளனர். இதற்கான ஆடைகளை வாங்குவதற்காக இருவரும் நேற்றுமுன்தினம் ரோம் கிளம்பிச் சென்றனர்.

28 வயதான றொனால்டோவுக்கு இது இரண்டாவது திருமணம். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு மிலேன் டொமிஸிஸ் என்ற பெண்ணை மணந்த இவர், கருத்து வேறுபாட்டால் விவாகரத்துப் பெற்றார். இவர்களுக்கு 3 வயதில் ஒரு மகனும் உண்டு. பெண் ரசிகர்களை அதிகம் கவர்ந்த இவர், 3 முறை பீபா சிறந்த கால்பந்து வீரர் விருது வாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்ரேலிய பயணத்தில் பிளெமிங் பங்கேற்பார்!



அவுஸ்ரேலிய டெஸ்ட் தொடரில் நியூஸிலாந்து கப்டன் ஸ்ரீபன் பிளெமிங் பங்கேற்பது உறுதியாகி விட்டது.

நியூசிலாந்து அணி தற்போது அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் மோதவுள் ளன. முதல் டெஸ்ட் வரும் 18 ஆம் திகதி பிரிஸ்பேனில் தொடங்குகிறது.

இந்தத் தொடரில் நியூசிலாந்து கப்டன் ஸ்ரீபன் பிளெமிங் பங்கேற்பது சந்தேகமாக இருந்தது. இவர் பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தின் போதே வைரஸ் காய்ச் சலால் அவதிப்பட்டார். தற்போது குணமடைந்துள்ள இவரை நேற்றுமுன்தினம் வைத்தியர்கள் பரிசோதனை செய்தனர்.

சோதனையில் உடல் நலம் தேறியிருப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து அவுஸ்ரேலியா செல்லும் பிளெமிங் முதல் டெஸ்டில் பங்கேற்பார் என எதிர்பார்க்கப் படுகிறது.

# தென்னாபிரிக்க அணி இந்தியா வந்தது!

ஸ்மித் தலைமையிலான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக நேற்றுமுன்தினம் இந்தியா வந்து சேர்ந்தது.

இந்திய - தென்னாபிரிக்க அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி கான்பூரில் தொடங்கவுள்ளது. இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் டிசம்பர் 2 ஆம் திகதி வரை கொல்கத்தாவில் நடைபெறும்.

டெஸ்ட் தொடருக்கு முன்னதாக தென்னாபிரிக்க அணி 3 நாள் பயிற்சி ஆட்டத்தில் விளையாடும். போர்ட் லெவனுடன் மோதும் இந்தப் பயிற்சி ஆட்டம் ஜெய்ப்பூரில் இன்று தொடங்கவுள்ளது. 16 ஆம் திகதி வரை இந்தப் போட்டி நடைபெறும்.

நேற்றுமுன்தினம் மும்பை வந்திறங்கிய தென்னாபிரிக்க அணி உடனடியாக அங்கிருந்து போட்டி நடைபெறும் ஜெய்ப்பூர் நகருக்குச் சென்றது. இந்தியாவை அதன் சொந்த மண்ணில் தோற்கடிக்க முடியும் என்று தென்னாபிரிக்க அணியின் கப்டன் சிமித் நம்பிக்கை தெரிவித்தார்.

தென்னாபிரிக்க அணி வீரர்கள் வருமாறு -

சிமித் (கப்டன்), டிப்பென்னா், கலிஸ், ஹாசிம், தாமி, பொலக், அல்போன்சா், மார்ட்டின் வான், ரூடொல்ப், ஹோல், பீட்டர்சன், புரொய்ன், என்ரினி, ஜஸ்டின் ஆன்டாங்.

# அரையிறுதி ஆட்டத்துக்கு சென். மேரிஸ் அணி தெரிவு!

## வின்சிங் 3 கோல்கள் அடித்தார்

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவினரால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் காலிறுதியாட்டத்தில் நேற்று சென். மேரிஸ் அணியை எதிர்த்து றோயல் அணி மோதியது.

சென். மேரிஸ் அணியினர் ஆட்டம் தொடங்கி 11 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பைச் சரியான முறையில் பயன்படுத்தி முதல் கோலைப் போட்டனர். இந்தக் கோலை அந்த அணியிலே மிகக் குறைந்த வயதுடைய வீரரான விக்ரம் (வயது 17) பந்தைத் தட்டிக்கொடுக்க வின்சிங் நேர்த்தியாக அந்தப் பந்தைக் கோலாக்கினார்.

இதன் பின்னர் சென். மேரிஸ் அணியால் கோல் அடிக்க முடியவில்லை. இதனால், இடைவேளைக்கு முன்னர் சென். மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கப்பட்டு முதல் 6 ஆவது நிமிடத்தில் - சென். மேரிஸ் அணியினர் தமக்குக் கிடைத்த கோணர் வாய்ப்பைச் சரியான முறையில் பயன்படுத்தி இரண்டாவது கோலை அடித்தனர். இந்தக் கோலையும் சென். மேரிஸ் அணி வீரர் விக்ரம் கோணர் அடிக்க அதனை வின்சிங் கோலாக்கினார்.

அதன் பின்னர் சென். மேரிஸ் அணி வீரர் விக்ரம் மிக வேகமாக அடித்த பந்தை றோயல் கோல்க் காப்பாளர் சாதுரியமாகத் தடுத்தார். 20 ஆவது நிமிடத்தில் - விக்ரர் தனித்து பந்தைக் கொண்டுபோயும் கோலடிக்க முடியவில்லை.

ஆனால், 22 ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணி வீரர் றொசாக் தட்டிக்கொடுத்த பந்தை, றோயல் கோல்க் காப்பாளரையும் மிக இலகுவாக மீறி வின்சிங் கோலடித்தார். இரு பக்கமும் மிக விறுவிறுப்பாக விளையாடிக்கொண்டிருக்கையில் - 26 ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணி வீரர் ஒருவர் தவறாக விளையாடியமைக்காக மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது.

அதன் பின்னர் இரு அணியினர் மேலும் முயற்சித்த போதும் எந்தக் கோலையும் போடமுடியவில்லை. இதனால், சென். மேரிஸ் அணி, றோயல் அணியை 3:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து, அரையிறுதி ஆட்டத்துக்குத் தெரிவானது.

இதில் மூன்று கோல்களையும் சென். மேரிஸ் அணி வீரன் வின்சிங் அடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பாகிஸ்தான் கடற்படைக் கப்பல்கள் இன்று கொழும்புக்கு வருகின்றன!


பி.என்.எஸ். நாஸர்,

(கொழும்பு)

பாகிஸ்தான் கடற்படைக்குச் சொந்தமான இரண்டு கப்பல்கள் இன்று பயிற்சி மற்றும் நல்லெண்ண விஜயமாக கொழும்பு துறைமுகதத்துக்கு வரவுள்ளதாக கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகததை வந்தடையும் இந்தக் கப்பல்களை பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளும் இலங்கைக் கடற்படை அதிகாரிகளும் வரவேற்கவுள்ளனர்.

பி.என்.எஸ். நாஸர், பி.என்.எஸ். தாரிக் ஆகிய கப்பல்களே மூன்று நாட்கள் கொழும்புத்துறைமுகத்தில் தங்கிநிற்கத் திட்டமிட்டுள்ளன.


பி.என்.எஸ்.தாரிக்

இந்த விஜயத்தின்போது இரு தரப்புப் படைகளுக்குமிடையிலான தொழில்சார் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளில் இருதரப்பினரும் ஈடுபடுவர்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி மற்றும் கொழும்பிலுள்ள பாகிஸ்தானியத் தூதுவர் பசீர்வாண ஆகியோர் இந்தக் கப்பல்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

எதிர்வரும் 17 ஆம் திகதி இந்தக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திலிருந்து புறப்படத் தீர்மானித்துள்ளன.

# இ.தொ.கா. - புளொட் பிரமுகர்களை எரிக் சொல்ஹெய்ம் சந்தித்து பேச்சு!

நோர்வேயின் விசேட சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் அரசியல் கட்சிகளுடன் நேற்றும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்தினார். புளொட் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளை இவர் நேற்றுச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

கொழும்பிலுள்ள நோர்வே தூதுவராலயத்தில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் அந்தக் கட்சி பிரதிநிதிகள் எரிக் சொல்ஹெய்மை சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாண நிலவரம் குறித்தும், தொடரும் அரசியல் கொலைகள், தெற்கு அரசியல் நிலவரம் ஆகியவை குறித்து ஆராயப்பட்டதாக புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கை சம்பந்தப்பட்ட தரப்புகளால் உறுதியாக கடைப்பிடிப்பதற்கான அழுத்தத்தை நோர்வே கொடுக்க வேண்டும் என புளொட் தரப்பினால் வலியுறுத்தப்பட்டது.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டாலும் போர்நிறுத்தம் தொடரப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களினது எதிர்பார்ப்பாகும்.

மீண்டும் ஒரு யுத்தத்தை தமிழ் மக்கள் விரும்பவில்லை. சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வையே தமிழ்மக்கள் விரும்புகின்றனர் என்பதையும் விளக்கினோம்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அரசாங்கக் கட்சிகளுக்குள் எற்பட்டுள்ள முரண்பாடு தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இந்தச் சந்திப்பில் அவர் சுட்டிக் காட்டியதாகத தெரியவருகிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான கட்சிப் பிரதிநிதிகளையும் நேற்று நோர்வே விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக அந்தக் கட்சியின் துணைச் செயலாளரும், அமைச்சருமான முத்து சிவலிங்கம் தகவல் தெரிவிக்கையில்,

சமாதானப் பேச்சுவார்த்தை எந்தளவிற்கு விரைவாக ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனை அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் இ.தொ.கா முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதியமைச்சர் எம்.எஸ்.செல்லச்சாமி, நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசால் முஸ்தபா, வி.புத்திரசிகாமணி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

# திருமலையில் நடந்த இப்தார் விருந்தில் கண்காணிப்புக்குழு - புலிகள் பங்கேற்பு!

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இப்தார் விருந்தில் தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

மொகைதீன் அன்தவார் மசூதி குழு, சமுதாய அறக்கட்டளை, திருகோணமலை ஜனசா சமூகநலச் சங்கம் ஆகியவை இணைந்து இந்த இப்தார் விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தன.

இந்த விருந்துக்கு திருகோணமலை வழக்கறிஞர் ஓ.எல்.எம். இஸ்மாயில் தலைமை வகித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா. சம்பந்தன், கே. துரைரட்ணசிங்கம், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌவ்பீக், திருகோணமலை மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் புரட்சி ஆகியோர் பங்கேற்றனர்.



போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்டத் தலைவர் டக்பின் ஆட்நெஸ், மேலதிக அரசாங்க அதிபர் சிங்கராயர் ஆகியோரும் இப்தார் விருந்தில் பங்கேற்றனர்.

# உடற்கல்வி டிப்ளோமாதாரிகளில் 80 பேருக்கு ஆசிரியர் நியமனம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த 325 பேரில் 80 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. உடற்கல்வி ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சையில் தோற்றிய 80 பேருக்கு தற்போது ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்கு திறைசேரி அனுமதியளித்துள்ளது.

நியமனப் பட்டியல் அடுத்த மாதம் வெளியிடப்படும் என்றும் தெரியவருகிறது.

## என்னைக்......

எந்தவொரு வைத்தியசாலைக்கோ செல்லவில்லை. இதனை நாம் உறுதியாகக் கூறுவோம். சூசை சிங்கப்பூரில் நின்றவேளை உலகின் சில நாடுகளிலுள்ள விடுதலைப் புலிகள் வந்து அவரை மீள நாட்டிக்குச் செல்லுமாறு கூறினர். இந்த விடயங்கள் உண்மையோ, பொய்யோ எனக்குத் தெரியாது. ஆனால் அவர்களுக்குள் பாரிய பிரச்சினை உள்ளது.

விடுதலைப் புலிகள் பெருமளவில் மாறியுள்ளனர். அவர்கள் எல்லாவற்றையும் திறந்து விட்டுள்ளனர். அவர்களது உறுப்பினர்கள் உலக நாடுகளுக்குச் சென்று வேறொரு உலகத்தைப் பார்க்கின்றனர். ஆனாலும் அவர்கள் அங்கேயும் அடுத்து யாரைக் கொல்லலாம் என்றே சிந்திக்கின்றார்கள்.

முதலாவது தடவையாக அவர்கள் வன்செயல்களுடன் கூடிய யுத்த நிறுத்தத்துக்குச் சென்றுள்ளனர் 70 வீதம் இந்த யுத்தநிறுத்தம் உறுதியாக உள்ளது.

குறைந்தது மூன்று வருடங்களாக அவர்கள் இதனுடன் உள்ளனர். அவர்களது கருத்தோ, இல்லையோ, தமிழீழத்தை தவிர்ந்த வேறொரு தீர்வை அவர்கள் பரிசீலனை செய்யத் தயாராக உள்ளனர்.

சில வருடங்களுக்கு முன்னர் கருணாவோ அல்லது சூசையோ பிரபாகரனுக்கு கீழ்ப்படியாமல் விட்டது தொடர்பாக ஒருவரும் அறிந்திருக்கவில்லை. அத்துடன் விடுதலைப் புலிகள் மக்களுக்குத் தேவையான சில விடயங்கள் தொடர்பாக உணர்ந்து கொள்ளக்கூடிய வகையில் வந்துள்ளனர்.

இருந்தும் அவர்கள் முழுமையான நிலைக்கு இன்னமும் வரவில்லை. நான் நினைக்கின்றேன் பிரபாகரனின் ஆளுமையில் சில மாற்றங்கள் வந்திருக்கலாம். ஆனாலும் அவரிடமிருந்து பெரியளவில் மாற்றம் வந்திருக்குமென நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு மாறியுள்ளது. மக்கள் மாறியுள்ளனர். பின்புறச் சூழல் மற்றும் அரசியல் அனுமானம் மாறியுள்ளது. எனவே இவை மாறியுள்ளதென நான் நம்புகின்றேன் எனத் தெரிவித்தார்.

# தென்பகுதி பயிற்சி முகாம்களை படையினர் பலப்படுத்துகின்றனர்!

தென்னிலங்கையில் உள்ள தமது இராணுவப் பயிற்சி முகாம்களை படையினர் பலப்படுத்தி வருவதாகத் தெரியவருகிறது.

இராணுவத்தின் பனாகொட, குடஓயா, மின்னேரியா, மகரகம ஆகிய இடங்களிலுள்ள படைமுகாம்களே அவசர அவசரமாகப் பலப்படுத்தப்பட்டு வருவதாக கொழும்புச செய்திகள் தெரிவித்தன.

புதிதாக இணைந்த பல நூற்றுக்கணக்கான படையினரும் சேவைக் காலத்தில் தண்டனை அனுபவிக்கும் சுமார் ஆயிரம் படையினரும் இவ்வாறு இராணுவ பயிற்சி முகாம்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைக்கு அரச படைகளால் ஈடுபடுத்தப்படுவதாகத் தெரியவருகிறது.

குறிப்பிட்ட இராணுவப் பயிற்சி முகாம்களில் புதிய மண் அணைகள் கம்பிவேலிகள் காவலரண்கள் போன்றனவும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

சுமார் இரண்டு மாதத்திற்குள் அனைத்துப் பயிற்சி முகாம்களும் புதிதாகப் புனரமைக்கப்பட வேண்டுமென கீழ்நிலைக் கட்டளைத் தளபதிகளுக்கு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட அறிவுறுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

## போதைப்...

பட்டுள்ள உரிமை கோரும் அறிக்கையில் "போதைப் பொருள் வியாபாரிகளுக்கு இதுதான் தண்டனை" என எச்சரிக்கை விடுக்கும் வாசகம் காணப்பட்டது.

இவரது தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருப்பதாகத் தெரிவித்த பொலிஸார், இவர் வேறொரு இடத்தில் சுடப்பட்டு குறிப்பிட்ட இடத்தில் போடப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவித்தனர்.

இதேவேளை, இவரது சடலத்தை படம்பிடிக்கச் சென்ற பத்திரிகையாளரொருவர் அங்கு காணப்பட்ட சில இளைஞர்களால் தடுக்கப்பட்டு தாக்கப்பட்டதாகவும் அங்கு கடமையிலிருந்த பொலிஸாரின் முன்னிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (201)

## அன்ரன்....

இவர் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனுடனான சந்திப்பின் பின்னர் நேற்று முன்தினம் வன்னி திரும்பிய திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், மட்டு. - அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு உள்ளிட்ட புலிகளின் முக்கியஸ்தர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இதையடுத்து நேற்றுக்காலை கலாநிதி அன்ரன் பாலசிங்கம் லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் குழுவினரை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், வட முனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா உள்ளிட்ட தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் வழியனுப்பி வைத்தனர்.

## மேன் முறையீடு செய்த

# 1500 பட்டதாரிகளின் பட்டியல் அடுத்த வாரம் வெளியாகும்!

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ், நிதி அமைச்சுக்கு மேன்முறையீடு செய்து நியமனம் பெறத் தகுதி வாய்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்ட பட்டதாரிகளின் பெயர்ப்பட்டியல் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது.

மேன்முறையீடு செய்தவர்களில் 1500 பேர் பயிற்சி பெறத் தகுதியானவர்கள் எனப் பிரதிநிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்தார்.

சுமார் 10 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் மேன்முறையீடு செய்திருந்தனர். அவர்களில் தகுதியான 1500 பேர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

மேன்முறையீடு செய்த ஏனையோரின் விண்ணப்பங்கள் உறுதி செய்யப்பட வேண்டியுள்ளது.

தற்போது பயிற்சிபெறும் பட்டதாரிகளுடன் இந்த 1500 பட்டதாரிகளும் சேர்த்துக்கொள்ளப்பட இருப்பதாக நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

# இரு வாரங்களுக்குள் சூறாவளியா? வளிமண்டலத் திணைக்களம் மறுப்பு!

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் இரண்டு வாரகாலப்பகுதியில் சூறாவளி ஏற்பட வாய்ப்பிருப்பதாக வெளியான தகவலை காலநிலை அவதான மையம் மறுத்துள்ளது.

எனினும், சாதாரணமாக நவம்பர், டிசம்பர் மாதங்களில் இவ்வாறான காலநிலை காணப்படுவதால் மக்கள் அவதானமாக இருப்பது சிறந்ததென அந்த மையம் தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக காலநிலை அவதான நிலையப் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில் -

நாட்டில் இன்னும் இரண்டு வாரகாலப்பகுதியில் இயல்பற்ற காலநிலை ஏற்படக்கூடும். இதன் காரணமாக மண்சரிவு வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. எனினும், இந்தக் காலப் பகுதியில் சூறாவளி ஏற்பட வாய்ப்பில்லையெனத் தெரிவித்தார்.

## சந்திரிகாவின்...

இந்த நிலையில் கொழும்பில் தங்கியிருந்து பலதரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்திய எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடு குறித்து நேற்றைய சந்திப்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு எடுத்துக் கூறியதாக தெரியவருகிறது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து எரிக் சொல்ஹெய்ம் நேற்றுமாலை 3.45 மணியளவில் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இவர் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துக் கூறுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.